
தென்றலின்
தேடல்கள்
கவிதைகள்
தமிழ்நெஞ்சம்
கவிஞர் தென்றல் கவி
தமிழ்ச்சிட்டு

tamilnenjam.com

# தென்றலின் தேடல்கள்

கவிஞர் தென்றல் கவி
(தமிழ்ச்சிட்டு)

தமிழ்நெஞ்சம்
59, rue des Entrechats, 95800 Cergy - France

# விபரம்

நூலின் பெயர் : தென்றலின் தேடல்கள்
வகை : கவிதைகள்
மொழி : தமிழ்
முதற்பதிப்பு : ஜனவரி 2019

ஆசிரியர் © : கவிஞர் தென்றல் கவி
e-mail : tamilchittu71@gmail.com
அலைபேசி : +91 9865840100

பதிப்பாசிரியர் : ‘தமிழ்நெஞ்சம்’ அமின்
முகப்பு,
உள்பக்கங்கள்
வடிவமைப்பும்,
வெளியீடும் : Tamilnenjam
59, rue des Entrechats
95800 cergy
France

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

பக்கங்கள் : 148
அளவு : Demy 1/8
விலை : 150 ₹ (INR)

# அணிந்துரை



இன்றைய கால கட்டத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அனைவருமே முகநூலில் கவிஞர்களாகப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதில் விரல் விட்டு எண்ணக் கூடிய வெகு சிலர் மட்டுமே கவித்துவத்துடன் எழுதும் ஆற்றல் படைத்திருக்கிறார்கள்.

சொற்களின் குவியல் வேறு, கவிதைகள் வேறு என்பதைத் தரம் பிரித்துத் தான் காண வேண்டி இருக்கிறது. சாதாரணமாக ஒரு நிகழ்வை விவரிப்பதெல்லாம் கவிதை ஆவதில்லை. கவிதையில் நாம் கையாளும் ஒவ்வொரு சொல்லும் - சரியாகச் சொல்வதென்றால் ஒவ்வொரு சீரும் - தன்னுள் பற்பல உணர்வுகளை உள்வாங்கிப் பிரதிபலிக்க வேண்டும்.

போன நூற்றாண்டுகளில் யாப்பு இலக்கணக் கட்டுக்குள், சந்தத்துக்குள், இசைக்குள் கட்டுப்பட்டு வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று நான்கு வகைகளில் பல உட்பிரிவுகளுடன் இருந்த கவிதை மகாகவியின் வசனக் கவிதையாகப் பரிணமித்ததும் போன நூற்றாண்டில் தான்.

இந்த முயற்சிகள் தொடங்கப் பட்ட போது முதலில் ‘வசன கவிதை’ என்றும் பின்னர் ‘சுயேச்சா கவிதை’ ‘லகு கவிதை’ ‘விடுநிலைப்பா’ என்றும், “கட்டிலடங்காக் கவிதை“ என்றும் அதன் பின்னர் புதுக்கவிதை என்றும்

வழங்கப்பட்டன.

இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனை, தனிமொழிச் சேனை, பண்டித பவனி இவை எதுவுமில்லாதக் கருத்துகள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே ''புதுக்கவிதை'' எங்கிறார் புதுக் கவிதைத் தாத்தா மு.மேத்தா.

அறிவார்ந்த, அறிவுரைகளுடன் கூடிய, அவ்வாறில்லாத வற்றைச் சாடிய 'கரு'த்துகளை 'விதை'ப்பதே காலங்கடந்தும் நிற்கும், கவிஞனுக்கு இறப்பில்லா நிலையைக் கொடுக்கும்.

அவ்வாறான கவிதைகளின் தொகுப்பையே, ''தென்றலின் தேடல்கள்'' நமக்களித்து இருக்கிறது.

கவிதாயினி தென்றல் கவி தமிழறிஞர் தங்கவேலனார், அவர்தம் அன்பு மகள் தங்க. அன்புவல்லி அம்மையார் வழி வந்தவர் என்பது ஒன்றே அவர் குருதியில் கலந்திருக்கும் தமிழ் ஆர்வத்தை நமக்குப் புலப்படுத்தும்.

கவிதாயினியின் 'கவித் தேடல்'களுக்குள் நுழைந்த வுடன் ஒரு 'கவியுலகப் பூஞ்சோலை'க்குள் புகுந்த உணர்வே ஏற்பட்டது.

ஆங்காங்கே வார்த்தை மயில்களின் நடனம், இசைக் குயில்களின் கூவல். சில இடங்களில் சிங்கத்தின் கர்ஜனை, புலிகளின் உறுமல் என்று நம்மை பிரமிக்க வைக்கும் பாங்கு பாராட்டுக்குரியது.

புதுக் கவிதைகள் மட்டுமின்றி, ஆங்காங்கே மரபுக் கவிதைகளும் நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

அணிந்துரைஎன்றானபிறகு,விமர்சனம்அவசியமாகிறது.

முதல் கவிதையான 'யார் கை அழகு' மருதாணி இட்ட ஓர் இளம்பெண்ணின் மனப் போராட்டத்தையும், நிறைவாக

அதையும் மீறி மருதாணி வெளுத்துப் போகவில்லை என்ற மன நிறைவையும், வெகு அழுத்தமான குழந்தைத்தனமான உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது.

நீங்களும் இந்த வரிகளைப் பாருங்கள்.

"அம்மா விளக்கச் சொன்ன பாத்திரங்கள்
காய்ந்து கிடந்தன
விளக்கப்படாமல்...
துவைக்க எடுத்துப்
போட்ட துணி
துவைக்கப்படாமல்...
கவலை கொண்டு நான்
போட்ட மருதாணி
அழிந்து விட்டால்
என் செய்வது?
பொத்தி வைத்துப்
பாதுகாத்தேன் கைகளை."

'தனிமையின் வானம்' எல்லோருடைய மனதிலும் அவ்வப்போது தோன்றும் வெறுமையை நன்றாகவே படம் பிடித்துக் காட்டுகிறது

"பொய்யான மாய உலகம்
கைக்கட்டி முன்னே நிற்க
போலிச் சிரிப்புகள்
உபசரிப்புகள் பின்னே
பீடு நடையிடுகிறது."

என்பது மிகவும் யதார்த்தமான உள்மன வேதனையின் வெளிப்பாடு.

'காதல் விற்பனைக்கல்ல' என்ற கவிதையில் நிகழ்காலக் காதலைப் அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

கண்ணே என்பார்
பொன்னே என்பார்
நீயின்றி இவ்வுலகில்லை
என்பார்...
நீதான் என் சாமி என்று கூட வணங்குவர்...

வான் கடலளவு ஆழம்
என உரைப்பர்
ஆனால் குறிக்கோள் ஒன்றே...

ச்சீ ச்சீ இதுவோ காதல்
விற்பனைச்சரக்காய் மாற்றியே இவ்வுலகில்
வலம் வருவதா?

காதல் என்றும் விற்பனைக்கோ
அல்லவே உணர்வீர்...

இங்கே கவிதாயினி 'காமம்' தன்னைச் சொல்லாமல் உணர்த்தியது தான் கவித்துவம்.

'வாராயோ வெண்ணிலவே' வெண்பா வகைமை ஆகும். முதல் மற்றும் மூன்றாம் வெண்பாக்களை நேரிசை வெண்பாக்களாகவும் மற்ற நான்கு வெண்பாக்களை இன்னிசை வெண்பாக்களாகவும் வடித்திருக்கிறார்.

சீர், தளை, தொடை போன்ற வெண்பா இலக்கணம் வெகு இயல்பாக வந்திருக்கிறது.

எல்லாக் கவிதைகளுமே ஒவ்வொரு விதத்தில் சிறப்பு வாய்ந்ததாக் அமைந்துள்ளன. அனைத்தையும் ஆய்வு செய்தால் இது அணிந்துரையாக இல்லாமல் ஆய்வு நூலாகி விடும் என்பதால் மற்ற கவிதைகளை உங்கள் இரசனைக்கு விட்டு விடுகிறேன்.

கவிதைத் தொகுப்பைப் படித்து முடிக்கும்போது ஒரு நல்ல நூலகத்திற்குள் சென்று வந்த மனநிறைவு

ஏற்படுகிறது. இன்னும் மரபு வகைமைகளில் மற்ற பாவகைகைமைகளும் முயன்றிருக்கலாம் என்ற ஆதங்கம் மனத்தில் ஏற்படுகிறது.

காதல், கருணை, ஏக்கம் என நவரசங்களையும் தொட்டுச் செல்கிறது இந்தத் தொகுப்பு. நூலின் கட்டமைப்பு நூலுக்கு அழகு சேர்க்கிறது.

இந்த கவிதை தொகுப்பு வாசகர்களுக்கு ஓர் ஆத்ம திருப்தியைத் தரும். கவிதாயினியை ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ்ச் சுவைஞரின் கடமை எனக் கூறி நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ். வாழ்க நற்றமிழர். வாழிய பாரத மணித் திருநாடு.

கவித் தென்றல், வெண்பா வேந்தர்,
அணிதமிழ்ப் பாமணி, முத்தமிழ்ச் சுடர்,
தமிழருவி, கவிச் சுடர்

அனுராதா கட்டபொம்மன்

''தாயகம்'' A - 85, ஜெய்நகர்,
திருவெறும்பூர், திருச்சி - 630 013
தமிழ்நாடு.

# வாழ்த்துரை



தமிழகம்... இது எங்கள் இல்லத்தின் பெயர்.

தலைமுறை தலைமுறையாக தமிழ் வளர்த்த இல்லம். தமிழோடு கண்டு கேட்டு உண்டு உயிர்த்து எம்முன்னோரும் யாங்களும் வாழ்ந்து ஐம்புலனும் தமிழ்க்காக என்று வாழும் இடம்.

தாத்தா மீனாட்சி சுந்தரர், தந்தையார் குறள் நெறித்தோன்றல் பெரும் புலவர் மீ.தங்கவேலனார், அண்ணன் ஆய்வுச்சுடர் அ.த.பன்னீர்செல்வம் நான் தங்க அன்பு வல்லி, தம்பியார் புலவர் வே.மாரியப்பன் என்று தொடரும் தலைமுறை.

எந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி வந்து வழிவழியாம். செய்கின்றோம் தமிழுக்காய் ஒப்புக்கொடுத்து தலைமுறை எங்களுடையது.

இதன் தொடர்க்கண்ணி இற்றுப்போய் விடுமோ - தமிழ் அப்படி விட்டு கொடுத்து விடுமோ?

தம்பி சுந்தரபாண்டியன் கடிதங்களை இலக்கிய மாக எழுத வல்லவர். என் பெரியவன் பாவேந்தன் இரு மொழிப்புலவன் என் பரதநம்பியும் எழுதுவான் தனித்த ஒரு நடையில் என்று தான் கண்டிருக்கிறேன். கனடாவுக்குச் சென்று மைந்தன் பெர்னாட்ஷாவின் இலக்கிய பசி கண்டு நூல்கள் தந்து மகிழ்ந்து ஓராண்டு கழித்து தமிழகம் வந்தேன்.

வந்து பார்த்தால் என் தமிழ்ச்சிட்டு தென்றல் கவியாக மலர்ந்திருக்கும் பெருவியப்பு. தமிழ் அப்படி உள்வாங்கிக் கொண்டிருக்கிறது.எம் இளம் கிளைகளை

தமிழ்ச்சிட்டு (எ) தென்றல் கவியை முகநூல் குழுமங்கள் அறிந்த அளவிற்கு நானறியவில்லை என்பதை தயக்கத்தோடு ஒப்புக் கொள்ளுகிறேன்.

அழகழகாய், மலர்ந்திருக்கும் பாக்கள் இன்னும் செம்மைப்பட வேண்டும் என்றாலும் புதிய குழந்தைக்கு நடை தள்ளாடும் போது கைத்தாங்க வேண்டும் அல்லவா? அப்படி ஒரு ஊக்கம் கொடுக்கத்தான் வேண்டும்.

சொத்து சுகம் போல் முத்தமிழ்ச் சொந்தங்கள் தென்றல் கவியைச் சுற்றமாகத் தழுவுகின்றன. மகிழ்ச்சி யாயிருக்கிறது.

தென்றலின் தேடல்கள் எப்பொழுதும் பூக்களோடும் பறவைகளோடும் இயற்கைப் பசுமையோடும் இருப்பது வழக்கம்...

இயற்கையாற்றுப்படை தந்த ம.இலெ.தங்கப்பாவின் ஆற்றுப்படுத்தலில் வளர்ந்தவர்கள் ஆதலால் அஃது இயல்பு தானே..

கத்தும் குயில், தழுவும் காற்று, முட்டைத்திருடும் செம்போத்து,அலைநெளியும்குளத்தங்கரைஎல்லாமும்பாடு பொருள்களாயிருப்பது அழகும் இயல்புமாயிருக்கின்றன.

புகைச்சுருட்டு உயிர் குடிக்கும் தூண்டில் என்று ம் உச்சியில் பூத்த பூவை பூச்சிகரம் என்றும் குயிலின் பாட்டு திசையெல்லாம் இன்னிசைத்தேனென்றும் எழுதுதல் நன்று.

காதல் பாடல்களிலும் நட்பின் நல்லியல்பையும் அழகியலையும் சுட்டும்போது மடந்தையோடு எம்மிடை

நட்பு என்று திருவள்ளுவர் சொல்லிச் செல்லும் சாயல் புலப்படுகிறது.

சமூக அவலங்களையும் சாடுகின்ற பாங்கு சிறப்பு. மாணவர்களை எழுப்பிவிடும் ஆசிரியத் தனம் இயல்பு..

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ்ச்சிட்டு பெயர் கொண்ட தென்றலின் பாடல்களில் வடமொழி விரவுதல் உறுத்தலே. இயன்றமட்டில் களைந்து இருக்கின்றேன். பொறுத்தருளுங்கள்...

இது தாந்தோன்றி (சுயம்பு) யாக எழுதிப் பழகிய அடி வைப்பு. இன்னும் பண்படவேண்டும். பண்படட்டும். வளர்த்தெடுக்கும் முகநூல் சொந்தங்களுக்கும் வளர் இளங் கவிஞர்களுக்கும் என் செந்தமிழ் வாழ்த்துகள்..

யாவர்க்கும் அன்பு.

அன்புடன்,

கவிமுகில் தங்க அன்பு வல்லி

பட்டுக்கோட்டை.

# அன்பின் பெருக்கும் அகத்தின் வாழ்த்தும்!



இனிய மகள் கவிஞர் தென்றல் முகநூல் பூங்காவில் உலவிடும் இலக்கியத் தென்றல். ஆம்... இவர் முகநூல் குழுமங்களின் செல்லமகள். சில குழுமங்களின் நிர்வாகத்தோடு ஒத்திசைந்து அவர்களின் நிகழ்வுகளை வழிநடத்தும் வல்லமை கொண்டவர். இவருடைய இயங்காற்றலும், ஒழுங்காற்லும், கவியாற்றலும் இவரின் அன்புத் தாய்வழி பெற்ற அருங் கொடைகள் எனத் துணிந்து கூறலாம்.

ஆம்! கவிதாயினி பட்டுக்கோட்டை தங்க.அன்புவல்லி என்று அறியப்பட்டு, தமிழ் மேடைகளைக் கட்டியாண்டவர், நம் தென்றலை ஈன்றப் பொதிகையாம் புனிதவதியார். அந்தச் சகோதரியாருடன் இணைந்து பல சொற்கொண்டல் கவியரங்குகளைக் கண்ட கற்கண்டு நினைவுகளின் சொந்தக்காரன் நான். புலமையும், புகழ்ப் பெருமையும் கொண்ட அவரின் புதல்வியாரின் நூலுக்கு வாழ்த்துரை என்ற வனப்புரை வழங்கக் கிடைத்த வாய்ப்பு என் வாழ்வின் நல்வரம்.

ஒரு புலமையாளரின் மகள் என்ற புகழ்நிழலிலேயே நின்றிராமல், படைப்புப் பல்லக்கு ஏறி பவனிவரும் இலக்கிய இளவரசி நான் எனத் தனக்கான பயணத்தை நடத்திக்கொண்டிருக்கிறார் தென்றல். அந்தத் தனித்தன்மை மிக்க பயணத்தின் ஒரு சுவடாக... இதோ... நம் கைகளில் ‘‘தென்றலின் தேடல்கள்’’ !

நூற்று நாற்பத்தெட்டு பக்கங்கள். நூற்றுக்கும் அதிகமான தலைப்புகள். இதற்குள் ஒரு காதல் பேரரசையே நிறுவியிருக்கிறார் தென்றல். உயிரைக் கரைத்து, உணர்வைக் குழைத்துக் காதலோவியம் தீட்டியிருக்கிறது இத்தூரிகைத் தென்றல். வள்ளுவர் வடித்துக் காட்டிய ஊடலும் கூடலும் இத்தொகுப்பில்வானவில்பந்தலிட்டிருக்கின்றன.நெக்குருகும் காதல் நெசவில் புன்னகையையும் கண்ணீரையும் ஊடும் பாவுமாக்கிக் கவிதைத் தறியோட்டியிருக்கிறார் தென்றல்.

முகந்தெரியா காதலிக்காக உருகுவதும், காதலர் பிரிவில் வாடுவதும், ஒருவருக்குள் ஒருவரைத் தேடுவதுமான காதலீர்ப்புவிசையில் நாமும் ஈர்க்கப்படுகிறோம். அந்த ஈர்ப்புடன் ,'யாரிடம் இவள் மனம்!', 'முற்றத்து முழுமதியே!' போன்ற கவிதைகளில் சங்கப் பாடல்களின் சாயல் படிந்திருப்பது கண்டு கவிஞரை வாழ்த்தி மகிழ்கிறேன்.

அதேசமயம் ''தென்றலின் தேடல்க''ளில் காதல் மட்டுமே மொத்தப் பக்கங்களையும் மொய்த்திருக்கவில்லை தீபாவளியின் இளமை எதிர்பார்ப்பு, செந்நெல் கரும்பாகும் வயலழகு, பணம் பணம் என்று ஓடுவதற்குக் கண்டனம் என குமுகாயப் பொறுப்பும் பேசப்பட்டுள்ளது. மேலும் நாளைய விழுதுகளாக மாணவர்களை நம்பிக்கையுடன் அணுகுவதும், அவர்களை 'அறிவு வளர் அகிலம் ஆள்' எனத் தூண்டுவதும், 'ஏர்முனையின் சீர்' பாடுவதும் வாழ்த்துக்குரியனவாம்.

யாழ்ப்பாணம் நூலக எரிப்புக்கும், முள்ளிவாய்க்கால் அழிப்புக்கும் எதிராக நம் தென்றல் தீப்பந்தம் ஏந்துவதை எப்படி வாழ்த்தி வரவேற்காமல் இருக்க முடியும்?

புகைக்கு எதிராகப் போர்க் கொடி பிடிப்பதும், சின்ன சின்ன ஆசைக்குப் பதில் பெரிய பெரிய ஆசைப் பட்டியல் நீட்டுவதும் மற்றும் இரசனைக்குரியவை.

செடியின் உச்சியில் பூச்சிகரம், காதல் எழுத்தாணி

என்றெல்லாம் சொல்லடுக்கி மயக்குகிறார். கவிஞர் தென்றலின் தமிழ்ப்புலமை அந்தாதித் தொடையில் இவர் யாத்துள்ள வெண்பாக்களில் வெளிச்சம் பகலைப்போல் பளீரிடுகிறது. ''திசையெல்லாம் இன்னிசைத் தேன்'' போன்ற ஈற்றடிகள் நம் இதயத்தைப் பின்னிக் கொள்கின்றன. ஒருவிகற்பமாகவே வெண்பாக்களைப் பூக்க வைத்திருப்பதற்காகவே தென்றலைத் தேரேற்றிக் கொண்டாடத் தோன்றுகிறது.

எது கவிதை? என்று தென்றல் தந்துள்ள விளக்கம் கவிதைக் கலங்கரை விளக்கம்.

''தென்றலின் தேடல்கள்'' இவரை புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லும் ஊர்தி.

இன்னும் பல தொகுப்புகளுக்கான வாசலை அகலத் திறந்திருக்கும் இத்தொகுப்புக்கும் , கவிஞர் தென்றலுக்கும் வார்த்தைகளால் அல்ல அன்புப் பெருக்காலான வாழ்த்துப் பூச்செண்டு.

வற்றா அன்புடன்,

திருக்குவளை கவிமாமணி
வெற்றிப்பேரொளி

''கவிதை'',
11/5, வாஞ்சிநாதன் முதல் தெரு,
வீனசு சந்தை, பெரம்பூர்,
சென்னை - 600011.
தமிழ்நாடு.

# பன்னீர்த்தூறலாய்...



தமிழே பாரம்பரியக் குருதியாய்
ஓடிக்கொண்டிருக்கின்ற தென்றல் கவி...

நிறைவுபடாமலே நிற்கின்ற தேடல்கள்
என்கிறார் தன்னுரையில்!

கவிஞரின் தேடல்கள் மொட்டவிழும் மலர்
நாற்றமுடைய பூந்தோட்டத்து நித்ய கவிகளாய்...

ஆழ்மனத் தேடல்களின் அதிர்வுகள்
வரிகளிலே வடிக்கின்ற அழகு கொஞ்சுகிறது
ஒவ்வொரு கவிதையிலும்!

'அலந்தகம் இட்ட சிறுபெண்ணாய் மணம்
நுகர்ந்து' மகிழ்ந்தது...

'அழகாய்ப் பூத்த தங்கரதமாய் மொட்டு ஒன்று'
மலரானதை சிலாகித்தது...

'காத்துக் கொண்டு அதே இடத்தில்
நான் கண்ணீருடன்'

காமத்தை மறுக்கும் 'காதல் விற்பனைக் கல்ல'
எனச் சீற்றம் காட்டியது

'கிடந்த மனதுக் கீறலிடக்
கண்கள் நடந்த கனவாய்
நகர மறுக்கும்'
புடமிட்ட வேதனையின் வெளிப்பாடாய்

காதல் அனுபவம் இல்லை எனும்
கவியின் கற்பனையில் அதே காதல் வரிகள்
ஆனந்த பைரவியாய்
பேரானந்தக் சிதறல்களை வீசியும்,

மனவிலங்குகளின் ஓசைகள் இதயத்தை மோதி
வேதனைச் சலனங்களை
வேல் பாய்ச்சிய வெந்த புண்ணாக
வடித்திருப்பது ஆச்சரியமே!

'எரிதழல் கொண்டு எரிக்கின்ற' ஆவேசம்

'அடங்காக் குருதித்தாகம்
ஆர்ப்பரித்து அடங்கிய'
முள்ளிக்காட்டின் நினைவுகள்

இன்னும்...
எடுத்துரைக்க முடியவில்லை
எழுத்து விதைத்த மேன்மைகளை...

அகன்று பரந்து விரிகின்ற ஆழியின் மேலேயும்,
நெடிய நீலக்கம்பளம் விரித்த ககனத்தின் கீழேயும்,
பறக்கின்ற கவிப்பறவையாய்
எண்ணங்களுக்கும் ஏக்கங்களுக்கும்
பாலமிட்டு வரைகின்ற வரிகள் வளரட்டும்!

'மேகங்களில் முகம் புதைத்து'
கவி மழையாய்ப் பொழியட்டும்!

வாழ்க! வளர்க! தென்றல்...வானம்தொட
என் இதயம் நிறை வாழ்த்துகள்.

ப்ரியமுடன்

ஸ்ரீ சக்தி

மதிப்புறுத்தலைவர் ''கவியுலகப் பூஞ்சோலை''

# என்னுரை



தென்றலின் தேடல்கள் நிறைவு படாமலே நிற்கின்றது. தேடிக்கொண்டே ...

எனது மெல்லிய உணர்வுகளைப் பொய்யின்றி சிறப்பாகவே இப்பாடல்களில் நிறைந்து உங்கள் உள்ளமதைத்தொட்டு இருந்தால் எனது தேடல்கள் கொஞ்சமேனும் வெற்றி அடைந்து விட்டது என்றே நான் கருதுவேன்.

இவற்றில் சில எனது வாழ்வின் நிகழ்வின் உண்மைப் பிரதிபலிப்பே.

தொடக்க நாள்களில் பாடல்களில் சில சொற்சிதறலாய் சிதறி இருப்பினும் சொல்லப்பட்ட மன உணர்வுகளின் உயிர்ப்பு என்பது உண்மையே...

இப்பாடல்கள் அனைத்தும் முகநூல் குழுமங்களில் நடைபெற்ற போட்டிப் பாடல்களே... சில நான் கலந்து கொண்ட கவியரங்க நிகழ்வின் பாடல்களேயாம்...

காதற் பாடல்கள் அனைத்தும் கற்பனையே... ஆனால் காதல் இல்லாத மனிதன் இவ்வுலகில் எவனுமிலன் ...

உங்களில் என்றோ நடந்த - நடைபெற்ற நிகழ்கால, இறந்தகால நினைவுகளில் என் பாடல் வரிகள் பளிச்சிடுவதாக உணர்ந்தால் எனக்கு உளம் மகிழ்வே.

போட்டிக்காய் எழுதிய இறுதி நிமிடக்கிறுக்கல்கள்... ஆம், இவை உங்கள் மனதில் கோலமிட்டால் எனது தேடல்கள் நிறைவு பெற்று விட்டன... என்றே நான் கருதுவேன்.

இந்நூல் உங்கள் கைகளில் தவழக்காரணமாக இருந்த இந்நூலின் பதிப்பாசிரியர் திருவாளர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கு நெஞ்சினிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்...

என்னை நன் முறையில் வழிநடத்திய எனது அருமைதாய் தங்க அன்புவல்லி அவர்களுக்கும், எனது இணையர் சுந்தரபாண்டியன் அவர்களுக்கும் எனது அன்பின் நன்றிகள் பல.

அடுத்ததாக நூல் எழுத ஊக்கப்படுத்திய அன்புச் சகோதர்கள் ஒரத்தநாடு நெப்போலியன், கவிஞர் பால தியாகராசன், அவர்களுக்கும், கவியுலகப் பூஞ்சோலை நிர்வாகத்திற்கும் மற்றும் அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது அன்பின் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்...

தென்றலின்தேடல்கள்உங்களுக்குப்பிடித்திருக்கிறதா? கொஞ்சமேனும்... கூறுங்களேன்...

நன்றி...

அன்புடன் உங்கள்...

தென்றல் கவி
தமிழ்ச்சிட்டு
தஞ்சை

# பதிப்புரை



கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவியென்றான் சுப்ரமணிய பாரதி.

தென்றல் கவி தமிழ்ச்சிட்டும் தனது வாழ்வின் உணர்வுகளை பொய்யின்றி சிறப்பாகவேக் கவிவரிகளைத் தந்திருக்கிறார். காதலும் இங்கே இழையோடுகிறது. காதலைப் பாடாத கவிஞர்கள் இல்லை. அதற்கு அழகியல் வர்ணம் பூசியிருக்கிறார் கவிதாயினி. அழகாகவே கைவந்திருக்கிறது. காதலை சொல்லும் விதம்தான் எவ்வளவு அழகு.

இது இவரது முதல் நூலென்று சொல்ல முடியாத அளவுக்கு சொற்கள் சிலம்பமாடுகிறது. கவித்திறமையைப் பாராட்டாமலிருக்க முடியாது.

இந்த வண்ணக் கவிக்களஞ்சியத்தை தமிழ்நெஞ்சம் பதிப்பித்து மகிழ்வதுடன், இன்னும் நிறைய நூல்களைத் தமிழுலகிற்குத் தந்து சிகரம் தொட வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாசகர்களும் வரவேற்பீர்களென்று நம்புகிறேன்.

அன்புடன்

**தமிழ்நெஞ்சம் அமின்**
ஆசிரியர் ‘தமிழ்நெஞ்சம்’, பிரான்சு
email: editor@tamilnenjam.com

# தென்றலின் தேடல்கள்

# யார் கை அழகு

யார் கை அழகு
அழகு பார்த்தாள் தங்கை
எனக்கோ நேற்று வைத்த மருதாணி
சிவந்து இருக்கிறதோ இல்லியோ
போகாத வாசனை மிகவும் பிடித்தது...
கால்களில் போட்ட கொலுசு
சிவக்கவில்லை
வருத்தமே தாளவில்லை
சிவந்த கைவிரல்கள்
தண்ணீரில் பட்டு மேலும்
அழகாய்த் தெரிந்தது
அம்மா விளக்கச்சொன்ன
பாத்திரங்கள்
காய்ந்து கிடந்தன
விளக்கப்படாமல்...
துவைக்க எடுத்துப்
போட்ட துணி
துவைக்கப்படாமல்...
கவலை கொண்டு நான்
போட்ட மருதாணி
அழிந்து விட்டால்
என் செய்வது?
பொத்தி வைத்துப்
பாதுகாத்தேன் கைகளை
வீட்டில் திட்டுகள் நிறைய
வாங்கிக்கொண்டு...
அழகிய நினைவுகள்
திரும்பவும் நினைக்கையில்
அழகாய்த்தான் இருக்கிறது



# நிலவாய் வந்த உறவே

நிலவே நீயும் செல்லாதே
உலவும் மனதில் ஒளியாய்
வழியும் அழகே அவள்.

நிலவே செல்லாய் நீ
கனவாய்க் கலையாய்
கதிரென மனதில்
மிளிர்வாய் அழகாய்

வெண்ணிலவே நில்லாய்
வருவாயிங்கே
பெண்ணிலவு ஒன்று செல்லுதே
சொல்பேச்சு கேளாமல்
தூது செல் நீயே

மஞ்சள் நிலவொளியில் கொஞ்சித்
தஞ்சமடைந்தவள் இன்றோ
மிஞ்சுகின்றாள்
கெஞ்சுகின்றேன் நான்.
எஞ்சியது என் கனா...

தொட்டுவிடத்துடிக்கின்றேன்
எட்டா நிலவாய் அவள்
கிட்டே வருவாளோ இல்லை
விட்டுச்செல்வாளோ?
சொல் நிலவே சொல்...

# மலர்ந்தது மொட்டொன்று

சட்டென மலர்ந்தது
மொட்டொன்று
அடி ஏனடி
அவசரம் உனக்குத்தான்
அழகாய்ப் பூத்துவிட்டது
எங்கள் தங்கரதம்
தாமரை மலர்வதும்
பெண்மையொன்று
சமைவதும்
யாருக்குத் தெரியும்?
மகிழ்ச்சியில் மனது
குளித்தது...
வாழ்க நலமுடன் வாழியவே
என்றே வாழ்த்தியது
கண்கலங்கி...



# புதிய நட்பு



விலக்கவும் இயலவில்லை
விலகவும் முடியவில்லை
அழகிய நட்பாய்த்
தொடரவே விருப்பம்
இனிமையுடன்
உனக்கு நீ எனக்கு நான் என்றே
இன்றைய கவிதை பாடலின்றி
நகர்ந்தது அவனுக்காய்
தூய அன்பை மட்டும்
வேண்டியே
தொடரட்டும்
இவ்வழகியல்
பிழையின்றி
என்றென்றும்

# தனிமையின் வானம்

தனிமையின் வானம் பரந்திருக்க
மனம் முழுதும்
வெறுமையாய்
ஏதோ நினைத்து
எதையோ
எதிர்பார்க்கும் மனம்
ஏங்குகிறது அன்புக்காய்

பொய்யான மாய உலகம்
கைகட்டி முன்னே நிற்க
போலிச் சிரிப்புகள்
உபசரிப்புகள் பின்னே
பீடு நடையிடுகிறது

உள்ளுக்குள் வெறுப்பை நல்க
தேடுகிறது உண்மையை
எங்கெங்கும்...

யாரிடமும் இல்லை
அது ஏன்?
தனக்குள்ளே கேள்வியைக்
கேட்டுக் கொண்டே...

அள்ளி வழங்க நினைக்கிறது
குறைவில்லா பாசந்தனை...

# காதல் விற்பனைக்கல்ல

மனதில் எழும்
எண்ணம் முழுதும் நிறைந்தது.
உடலில் அத்தனை அணுக்களிலும் நங்கூரமிட்டு அமர்ந்து
ஆட்சி செய்தது.

பார்க்குமிடமெங்கும் தோன்றியது
அவனது பிம்பமாய் அனைத்தும்.

பார்த்தாலோ நிலைகொள்ளாது
கால்கள் தரையில் நில்லாது
மனம் மட்டும் பறக்குமே
அது...

சாலையில் போகும் ஒவ்வொருவரையும்
கண்கள் தேடுமே
இது அவனோ என்று

வீதிகளில் எழுதப்பட்ட பெயர்களில் உனது பெயர்
எங்கே என நோக்கி
உளம் மகிழுமே...

யாரிடமும் பேச சகியாதே
உன்னுடன் மட்டுமே பேச வேண்டும் என நினைக்குமே

ஒரு கணப்பொழுதும்
விட்டுப் பிரிய நினையாது

உடலில் ஏதோ ஒரு குறுகுறுப்பு ஓடிக்கொண்டு
எப்பொழுதும்...

எப்படிச் சொல்வது
அவ்வனுபவந்தனை?

கொல்லாமல் கொல்லும்
சுக வேதனையாய்

ஆனால் வரும் காதல்
ஒரு முறை மட்டுமே
பன்முறை திரும்பத் திரும்ப
வருவதா காதல்?...

காதல் எனச்சொல்லி
காமச்சாக்கடையில் கழித்துச் செல்வதோ?
காதல் என்பீர்?

கண்ணே என்பார்
பொன்னே என்பார்
நீயின்றி இவ்வுலகில்லை
என்பார்...
நீதான் என் சாமி என்று கூட வணங்குவர்...


வான் கடலளவு ஆழம்
என உரைப்பர்
ஆனால் குறிக்கோள் ஒன்றே...

ச்சீ ச்சீ இதுவோ காதல்
விற்பனைச்சரக்காய் மாற்றியே இவ்வுலகில்
வலம் வருவதா?

காதல் என்றும் விற்பனைக்கோ
அல்லவே உணர்வீர்...

# வந்தது தீபாவளி

தீப ஒளியுடன் வந்தது தீபாவளி
மிளிர்ந்தது அழகாய்
என்று வரும் என நாட்கள் எண்ணியே
நாள்காட்டி தேய
இதோ வந்து விட்டது தீபாவளி...
பலவகை இனிப்புகள்
புது உடைகள் படையலாக்கி
கிண்ணத்தில் வைத்த நல்லெண்ணெய் தேய்த்து
வெந்நீர்க்குளியல் முடித்து
பட்டாசுகள் மத்தாப்புகள் கொளுத்தியே
யார் வீட்டில் எரிந்த பட்டாசுத் தாள்கள்
அதிகம் எனப் பார்த்த கணக்கு
இன்றும் நினைவில்...
நேற்று வைத்த மருதாணி வாசம்
கைகளில் மணக்க
எல்லாம் புதிது புதிதாக
புது உடையின் வாசத்துடன்
நீ அழகா நான் அழகா
தெரு கூடித் தோழிகளுடன்
அம்மா சுட்ட வடை சுழியம்
தோசைக்கறிகுழம்பு தின்றே...
மகிழ்ந்த அந்தத் தருணங்கள்
நிறைந்த மகிழ்ச்சிக் குலைந்தது
இளைஞர்கள் வாயில் நாறிய சரக்கு
ஊறிய பிதற்றல் நாளும் கிழமையும்
ஏனென எண்ணிக் கசந்த
நினைவும் தீபாவளிக்கே!



# செந்நெல் கரும்பாக

செந்நெல் கரும்பாக
இங்கே வெளஞ்சி நிக்குதே
சாஞ்சி நிக்குதே
செழித்து நிற்குதே

பச்சைப்பசுமை எடுத்துச்செல்லுதே
மனதை இழுத்துக்கொல்லுதே

வீசு தென்றல் பேசிச் செல்லுதே
என்னுடன் கை
கோர்த்துக் கொள்ளுதே
சேர்ந்து சுகித்துக்கொள்ளவே

ஓடும் நண்டு நின்று  என்ன பார்க்குதோ
இல்லை என்னைப்பார்க்குதோ
நானும் சென்று பார்த்தேனே
நெஞ்சம் ரசித்து நின்றேனே

ஒற்றைக்கொக்கும் ஏனங்கே
நின்றுகொண்டே என்ன செய்குதோ
பாவம் கால் வலிக்குதோ
என்ன தவமோ எந்த மீனுக்காம்?
அழகுக்காட்சி அசைத்து பாக்குதே
வியந்து நிக்குதே மனதை
அசைத்து விட்டதே

நகரும் நத்தை பிடிக்க
தொடரும் புள்ளினமாம்
படர்ந்து செல்லுதே
அழகுப் படமாய் வரைந்து விட்டதே
மனதில் எழுதிச்சென்றதே
கொஞ்சும் அழகில் நெஞ்சம் கலந்து
நானும் இங்கே வந்து வீழுந்தேனே
மையல் கொண்டேனே

வளைந்து சென்றே
செல்லும் நீளப்பாம்பு
நீரில் மூழ்கியே யாரைப்பாக்குதோ
கேக்குதோ சிறு தவளை
இந்த காட்சி என்னையிங்கு
அச்சமூட்டுதே மனது
அஞ்சி நிற்குதே

நெற்றி வியர்வைச் சிந்தச் சிந்த
உழைத்த உழைப்பின் மேன்மை தெரியுதா?
உனக்கும்புரியுதா?
வளர்ந்து நிற்குதே
இங்கு செந்நெல்
கரும்பெனவே செழித்து நிற்குதே
மனமது மகிழ்ச்சி  கொள்ளுதே..



# மஞ்சம் விரித்தான் மகிழ்ந்தே

அந்திப்பொழுதின் அலைகள்
சந்தமிசைத்தே சிந்து பாடிட
சொந்தம் கொண்டாடிட நினைந்து
வஞ்சியவள் கொஞ்சும் மொழி பேச
பஞ்சிலிட்ட நெருப்பெனவே மன்னனவன்
துஞ்சும் நிலை களைந்து
மஞ்சம் விரித்தான் மகிழ்ந்தே
தஞ்சமடைந்தாள் கோதையும் குளிர்ந்தே

# கல்லில் பூ பூக்கிறது

கல்லில் பூ பூக்கிறது
அட என்னடி அதிசயம்
என்ன செய்தனையோ
எப்படி நடந்தது இப்படி?
இரும்பு இதயமும் இளகச்செய்த
செப்படி வித்தை
எப்படிக்கற்றாயடி?
பேசிப் பேசியே
கரைய வைத்தாயோ
கண்ணே
நூறு கவிகள் கண்கள் பேசியதே
காதல் கூறியதே
பட்டமரமும் துளிர்த்ததே
பெண்ணே உன் பார்வையில்
சிறிய இதழ்களில்
சிறைப்பட்டனவே
மொத்த அன்பையும்
அள்ளிக்கொடுத்தே
பெற்றுக்கொண்டாயே
என்னை...
பூக்க வைத்தாய் கல்லினிலே
கெட்டிக்காரிதான் நீ
எப்படி இருந்த என்னை
இப்படி மாற்றிய கள்ளியே
விலகேன் இனி
ஒரு நொடியும்
பிரியேன் எப்பொழுதும்...



# வாராயோ வெண்ணிலாவே

வெண்ணிலவே நீயும் வெளுத்ததென்ன பெண்ணழகின்
கண்ணசைவுக் கண்டே கரைந்திடத்தான் -
விண்ணிலிருந்து
மண்குளிரத் தண்ணொளியை வாரி வழங்குவையோ
எண்ணமெல்லாம் காதல் இனித்து!

என்றும் நிறைந்தாய் எனக்குள் ஒளிவீசிக்
கன்றும் பரிதவித்துக் காத்திருக்கத் தாய்தேடி
இன்றும் வருவாய் இனிய பொன் வெண்ணிலவே
பொன்றும் இளமை பொழிந்து

பொழிந்த நிலவினிலே பொன்னெழில் பூக்க
மொழிந்தவெலாம் செந்தமிழின் முத்தோ - வழிந்த
இசைப்பூங்குயிலோநான் என்னென்பேன் ஆகா
திசையெல்லாம் இன்னிசையின் தேன்

கிடந்த மனமது கீறலிடக் கண்கள்
நடந்த கனவாய் நகர மறுக்கும்
உடைந்த உறவுகள் உலகில் இருக்க
கடைந்த தயிராய்க் கரைந்து

கரைந்த உணர்வினில் காதலாய் வந்தேன்
வரைந்த நிலவாகி வானிலே கண்டேன்
விரைந்து செலவே விழைந்தாலும் ஏனோ
அரங்கிருந்தேன் நெஞ்சம் அசைத்து

அசைத்தது தண்ணிலா ஆழ்மனம் கொண்ட
கசப்புத்தொலைந்து கவிதை விசைத்தெழவே
நெஞ்சம் கனிந்து நெகிழ்ந்த திதுவெல்லாம்
தஞ்சமென வந்ததனால் தாம்

தம்மின் அழகொடு தாமாய் ஒளிர்ந்தது
நம்மின் நினைவில் நனைந்த ஒளியினால்
செம்மை நிறத்தாள் சிலிர்த்தாள் களித்தனள்
எம்மையும் சேர்த்தாள் இனித்து

# யாரிடம் இவள் மனம்...

யாரிடம்
இவள் மனம்
சென்றதோ
எனை என்று
வெல்லுமோ
சொல்லுமோ
கொல்லுதே
எனையின்றே..

கடை விழிப்
பார்வையது
நோக்குமோ
தாக்குமோ
போக்குமோ
என்
வெந்துயரை
நீக்குமோ
யானறியேன்...

கலங்கும் விழிகள்
கூறும்
மொழிகள் தாம் என்னவோ..
தேடும் விடைகள்
வினாக்களுடன்

சொல்லடி..யாரிடம் நீ
அன்பு கொண்டனையோ?
பூட்டிய இதயம்
திறவாதோ
மொழியாதோ?

ஆற்று மடை
வெள்ளமெனப்

பாயுமோ காதல்
தீர்க்குமோ நோய்தான்
தீருமோ தானாய்...

சேற்றுமடை
மீனெனப்
பாய்வதும்
பின் நழுவுவதும்
மெல்லத்
துடி துடிக்க
வைப்பதுவும்
அழவிடுவதும்
ஏனடியோ?

பாரடி என் பைங்கிளி
காத்திருந்த காலமது போதும்!

பூத்த விழிகள்
மயங்கியே
செல்லுதேயென்
பொழுதுகள்..

வேண்டாமடி
இந்த மாயவித்தை
கண்கட்டி
ஆட்டமும்
போடும் நாடகமும்
முறைமையோ?
தகுமோ?
திரைக்குத்தான்
வருமோ
விரைவில்?...

# கருணை

கருணைகொள் மனிதா
கருணைகொள்
ஊர் உனைப் பார்க்குமே
போற்றுமே
கருணைகொள்
கல் நெஞ்சமென இருந்தது போதும்
ஊற்றெடுக்குமா
ஊருமா
உன் நெஞ்சம்
வஞ்சம் கொண்டது போதும்
கொஞ்சமேனும் உணர்வுகொள்
கடும் பாறைதனையும்
பிளக்குமே சிறு வேர்
உன் மனம் உளிகொண்டும் பிளவா
தெரியும்...
சிறுவேர்தனை நெருங்கவிடு...
இரும்பு இதயம்
மாறட்டும் பஞ்செனவே
கருணைகொள்
பிற உயிரிடத்தே...
இறங்கிக் காட்டு
இரக்கம்தனை...





பிஞ்சுப் பாதம்
நெஞ்சு நிறைக்க
பஞ்சு மெத்தை
விஞ்சியதே
இதன் மென்மை

# அன்பிற்கு ஏங்கும் உயிர்கள்



அன்பிற்கே ஏங்கிய உயிர்கள்
ஆசைதனைக் காட்டுதே
பாசத்திற்கே அடிமையாய்ப்
பாழும் மனசு தவிக்குதே

ஏழ்மை கொண்டே முது பருவம் எய்திய
பெற்ற தாயவள் தவிக்கிறாள்
தம் பிள்ளைப் பாசத்துக்காய்

தாய்தந்தை புறக்கணித்தே
போகின்றான் தூரதேசம்...
பணத்திற்காய் ஆசைப்பட்டு
உருவழிந்த உறவுகள்,
கண்ணீர் காவியங்களாய்

தவிக்கும் பெற்றோர்
குழந்தை இருந்தும்
அனாதையென...

காப்பகத்தில் குழந்தைகள்
ஏக்கத்துடன்...
விட்டுச்செல்லும் அவலங்கள்...

செய்யும் வேலையே
முதன்மையெனச் செல்லும்
தாய்மார்கள்

பெற்ற குருத்துகள் தாயிருந்தும்
ஏங்கியே அன்பிற்காக..

அன்புதனைக்
கொடுப்போம்
குறைவுபடாதே..

# நிலையற்ற உலகில்

உறவுகள் பிரிவதும்
உறக்கமிலாது செய்வதும்
பாழும் பணம் தானே

பாசம் துளிர்க்கச் செய்யும்;
தண்ணீர் ஊற்றும்;
வளரும் வானளாவ;
பணமிருந்தால் மட்டுமே.....

என்னே கருணை
என்னே அன்பு
ஏனடா இப்படி இழிநிலையாய்
உனது குணம்?



மனிதம் மறந்தோம்
பணத்தின் பின்னே
வெட்கமற்றே

பணமற்றவர் இழிமக்களா??
இன்றைய உலகு இதுதான்...

பாசம் கொட்டும்
பார்ப்பவர் வியக்கும்படி
பணமிருந்தால் மட்டுமே..
சீசீ... மானிடனே
வேண்டாமடா...

தேவைதாம்
யார் இல்லையென்றது?
அதற்காய் அடகு வைப்பாயோ
உன்னிலையை?

பணம் பணம் பணம்
இதற்காய்த் தரிக்கும்

போலி முகமுடிகள் போதுமே..
இரு... இயல்பாய்

தேடுகிறேன்
தேடுகிறேன்
கிடைக்குமா
பாசமே உலகினிலே
உண்மையாய்?

பாசமிகு பகட்டற்ற
வாழ்வாய் ஆகட்டும்
பொருளாசை தவிர்த்தே
மனங்களால் இணைந்தே



சக மனிதனை குணம் கொண்டே
அளப்போம் பணமற்றே

நிலையற்ற உலகில்
அருளோடு இயைந்தே வாழ்வாய்...
வாழலாம் வா
பொன் பொருள் மறந்தே...



# என்னுள் இசைக்கும் சுக ராகமே

என்னுள் கேட்கும் ராகங்கள்
சுகமாய்க் கேட்டுக்கொண்டே
எப்பொழுதும்.

அதிகாலை பனிபடர் சில்காற்று
முகம் மோதும்
சிலிர்ப்பில் மலரும் மனம்

அசையும் செந்நிற ரோசாவின்
அழகில் மலர்ந்த இதயம்
கேட்கிறதே இனிய கீதம்

எங்கோ கேட்கும்
குயிலின் இன்னிசையில்
கொள்ளை கொண்ட இதயம்

ஓடும் ஆற்றுநீரின் சலசலப்பில்
பாடும் பறவைகளின் கானம்

பெய்யும் மழையின்
சாரல் இசையில் பொங்கிய மனம்

துள்ளும் கெண்டைகள் சொல்லும் சேதி
ஒற்றைக்கொக்கு அலம்பும் நீரின் சப்தம்
கேட்டதே செந்தமிழ்ப் பண்மொழி

இரவின் மடியில் உறக்கம் கலைந்த
குழந்தை சிணுங்கல்

காலைச்சூரியன் வரவு
எழுந்த மாக்கள் ஏழுப்பும் சத்தம்

இப்படி எழும் கேட்கும்
இசை ராகங்கள் மீட்டும்
கீதங்கள் பரவியே
மேனியெங்கும் சிலிர்த்த சுகம்
எப்பொழுதோ எழுந்த
முதற் காதலின்
ஏகாந்த நினைவுகள்

அழகான நினைவுகளில் மூழ்கிய
ஆழ்ந்த இதயத்தில்
அவ்வப்போது கேட்கும்
ரகசிய ராகங்கள்



சிவந்த முகம் சொல்லும்
சிலிர்த்த சுகராகங்கள்
அவளுக்கு மட்டுமே புரிந்தவை
புதுமையாய் முகர்ந்தவை...

யாருக்குத் தெரியும் அவளன்றி
அவளின் ராகங்கள்??!!

# தமிழ்

தமிழாய்க் கலந்தாய் தமிழே உறவாய்த்
தமிழே வருவாய் தழைத்து

உணர்வில் உறைந்த தமிழே எனது
மணமாய் நிறைந்த மலர்

கருவில் கலந்தக் கனவே தமிழின்
திருவாய் நிறைந்த திகழ்வு

# ஞாபகம் வருதே
# ஞாபகம் வருதே

காலைப்பொழுதுகளில் கேட்கும் ஆற்று நீர்
சளசளப்பின் அழகிய ஞாபகம்

கொட்டிய பவள மல்லிகைகள்
மட்டிலா மகிழ்வைத்தந்த ஞாபகம்

நாவல் மரத்தின் பழங்களைத்
தேடி சகதியில் விழுந்து எழுந்த ஞாபகம்

எப்பொழுது கொட்டும் நெல்லிக்காய்கள்
எனக்காத்திருந்த ஞாபகம்

முல்லைப்பூக்கள் சுற்றிய நீண்டப்பின்னலை
முன்னால் போட்டு ரசித்த ஞாபகம் ..

வீட்டுச்சன்னலின் ஓரம் இரவு முழுதும் படித்து
கண் சிவந்த கதைகள் ஞாபகம்

பசிய புல்லில் புரண்டு ரசிக்க
கடித்த எறும்புகளுடன் அலறிய ஞாபகம்

வீட்டுத்திண்ணையில் அளந்த கதைகளின்
அற்புத ஞாபகம்

மின்சாரமில்லா இரவுகளில் அப்பா பாடிய
பாரதிப்பாடல்களில் சிலிர்த்த ஞாபகம்

அம்மாவுடன் சென்ற கம்பன் கழக
மேடையில் நானும் அமர்ந்து

கவிதாயினியாய்  சிறு வயது
கற்பனையில் சிறகடித்த ஞாபகம்

நகரும் நத்தை நீலப்பறவையென
ரசித்த ஞாபகம்

பூக்களின் அழகில் விழுந்த மனது
பறித்த மலர்களின் பரவச ஞாபகம்

எதைச்சொல்ல எதை விட?
நீங்கா நினைவுகள் நங்கூரமிட்டதை



# அழகே ஆபத்து

ஏறின வண்டுகள் அணிவகுத்து
அடுக்கடுக்காய்
மரத்தினில்
செந்நிறத்தில்
கருநிறப்புள்ளிகள்
எடுப்பாகவே
மிகவும் அழகாய்
நன்றாகத்தானுள்ளது
அதிக அழகே முடியும்
பேராபத்தில்
உணரா மரம்
பெருமையுடன் நின்றது
அழகைத் தாங்கியே

# உன்னைச் சிந்தித்தால்

உன்னைச்சிந்தித்தேன்
உருகியே உள்ளம் கரைந்ததே ...
என்ன இது?
கண்ணீரில் நனைந்த விழிகள் கூறும் கதைகள்
அறிவீரோ நீவிர்?

நீயும் நானும் கதைத்த கதைகள்
காரணமின்றியே
காற்றும் அதிசயித்ததுவே

யாரெனவே தெரியாதே
எனக்கே உன்னை
என்ன பெயர் தெரியாது
ஏதும் தெரியாது
காதல் மட்டும் வளர்ந்தது
ஆலெனப் பெருமரமாய்...
மகிழ்ந்தே உள்ளம் நெகிழ்ந்தது
பெருகிய அன்பை பார்த்தே வியந்தாய்

இப்படியும் முடியுமா
அன்பு வைக்கவே
உன்னால் என்றே!!!
என்னை வியந்து நீயும்
உன்னை வியந்து நானும்...
உருகிய காதல்
ஊற்றாய்ப் பெருகியதே...

உயிரென இருந்தாய் உணர்வில் கலந்தாய்
நானே உனக்கே எப்போதுமென்றாய்
என்னுலகே நீயென்றாய்
எனக்கெனப்பிறந்த தேவதையே என்றாய்
பறந்தேன் வானில் நானும்

என் சாமி என் தெய்வம் நீயென்றாய்
ஓ அப்படியா நான்? ம்ம்
வணங்கினாய் உன் மனக்கோவிலில்

வியந்தாய் அதிசயித்தாய், இரவு பகலென
உன்னுடன் உன்னுடன் மட்டுமே
சுற்றிய நினைவுகளின் ஊர்வலம்...

ஒர் தினம்
ஆமாம் வேண்டாம் நானுனக்கே...
சென்றுவிடு என்றேன்
பேசவில்லை உன்னுடன்
துடித்தாய்... தொடர்ந்தாய்
கண்டும் காணாதவளாய் நானே...

இன்றோ போய்விடு என்று சொல்லியே
வா வென்று சொல்லியிருக்கிறேனோ?
சென்றுவிட்டாய் என்னை விட்டே...

கேட்கிறேன் எங்கே நீயென
சொல்கிறாய் “நான் வேறு நீ வேறென்று”

நான் செல்லவில்லை யடா
அதே இடத்தில் நின்று கொண்டு தான் இருக்கிறேன்
நீ சென்று விட்டாய் வெகு தூரம்...

இதான் உண்மைக்காதலோ
சென்று விடு என்றால்
சென்று விடுவாயோ?

தொலைந்த கவிதை
தொலையாத வரிகளுடன் என்னுள்...
கண்ணீரில் விழிகள் நனைகின்றது
தொண்டைக்குள் ஏதோ அடைத்தே
ஏன் எனக்கு மட்டும்????
நினைவுகள் திரும்பவும் உன்னையே...



# தருவினில் துளிர்த்த காதல்

பசிய தருவினில் சென்ற மனம்
வருவதில்லை திரும்பவும்
அதிலேயே சென்றே
திளைக்கும் மகிழும்

ஏனோ எனக்கும்
இத்தருக்களுக்குமிடையே
ஏதேதோ தொடர்பு உறவு
காலம் காலமாக
ஏற்பட்ட பந்தமாய்
உணர்வு...

எங்களுக்கு மட்டுமே
புரியும் பரிபாசை
எவரும் அறிய இயலாத
அழகிய உறவிது

சிரிப்போம் பழகுவோம்
யாருக்கும் தெரியாதே
வளர்ந்த காதல்
துளிர்த்த காதல்
ரகசியமாய்
நெஞ்சினில்...
எப்பொழுதும்

# கோடையில் நிழலென

நிழல் சுமக்கும் நெஞ்சில்
வந்தது யாரோ
குளிர் தருவென
வளர்ந்தது பொழிந்தது
அன்பைக் கொட்டிய
விழிகள் சொன்ன சேதி என்ன?

திறந்து பார் மனக்கதவை
தெரியாத செய்திகள்
தெரியுதா புரியுதா

வெளிச்சக்கீற்றுகள் நுழையவே
தருவாயோ அனுமதியே...

கோடையில் நிழலென
குளிர்ந்த நிழலாய் வந்தாள்
அள்ளிச்சென்றாளே

தாகம் தணிக்க வந்த நீரெனவே
மெல்லென வீசும் குளிர்தென்றலாய்
வீசிச் சென்றது யாரோ
என்ன பேரோ

வீசிய ஒற்றைப் பார்வை யில்
மொத்தமும் தொலைத்தேனே
என்னையே...

வருவாளோ தருவாளோ தன்னை
இதமாய்ச் செய்திகள் கூறவேண்டும்
பதமாய் என்னைத்தரல் வேண்டும்...
பாசமொழிகள் பகர்ந்தே...

# நாளைய விழுதுகள்

இன்றைய
வாழ்வு
ஆலெனவே
நம் வாழ்வில்
தழைத்த
விழுதுகளிவை...

நாட்டில்
புரையோடிய
லஞ்சம்தனை
வேரறுக்கப்
போகும்
வெட்டறுவாக்கள்

போலி அரசியலுக்கு
வேலி போடப்
போகும்
கள்ளமில்லா
வெள்ளை மலர்கள்

விடிவெள்ளியாய்
வானில் வலம்வரும்
வெளிச்சப்பூக்களாய்
ஒளி வீசுபவர்கள்.

நரபலி
தரும்
நயவஞ்சகர்
கூட்டத்தை
நாசமாக்கப்
போகும்
நரசிம்மன்
இவர்கள்...



கள்ளப்
பண
முதலைகள்
உலவும்
குளங்களை
மூட வந்த
மூலவர்கள்...

கல்வியில்
நற்குணங்களில்
வாய்மையில்
நேர்மையில்
செம்மையில்
செழித்த
துளிர்களாய்
நாளை விருட்சமென
மாறட்டும்..

நாளை உனது கையில்
நம்பிக்கையுடன்
செயல்படு
வளரட்டும்
நற்பண்புகள்
நீருற்றிய
செடியென

பூத்து காய்த்து
பயன் தரட்டும்
விழுதுகளாய்த்
தாங்கட்டும்
புத்துலகை

# உன்னில் நான்

உன்னில் என்னை த்தேடுகிறேன்
உயிரே
உன்னில் என்னை

கண்ணில் கண்டேன் காட்சிகளாய்
உன்னையே
என்னை விட்டுப் போகாதே
தன்னந்தனியே
தவிக்கவே நீயும்

என்னில் நிறைந்தாய்
எண்ணமதில் உறைந்தாய்
உள்ளமதில் விழுந்தாய்
உயர்ந்தாய்
எழவில்லை நானே
இன்னும் விழுந்துவிட்டேன்
உன்னுள் கலந்துவிட்டேன் என்றோ

போகவே நினையாதே
போக்கிடம் எனக்கில்லையே
வாக்கு கொடுத்துள்ளாய்
போகமாட்டேன் என்றே

நீயே எல்லாமாய் ஆனாயெனக்கே
நானே உனக்கென்றென்றும்
உனைப்பிரியாதிருப்பேனே

நம்பிக்கை கொள்
நங்கை உன்னுடன்
நாளுமிருப்பேன்
நாழிகை கூட
விட்டகலாதே

என் தேடல் சரியோ
உன் ஊடல் முறையோ
சகியின் நெஞ்சில்
சாகசம் செய்தே
சாய்த்து விட்டாயே

உன்னில் நானும்
என்னில் நீயும்
நீங்காதே நீக்கமற
நிலைத்தே
நீண்ட பயணமாய்
நில்லாதே
நிலைபெறட்டும்...
வாழிய வாழியவே

# ரௌத்திரம் பழகு

ஏ மனிதா
வெந்து வெந்து சாதல் போதும்
நொந்து நொந்து
விதி வந்தே மாய்வோம்
எனாதே
நஞ்சு கொண்ட மாந்தரை
வேருடன் அழி
பிஞ்சு என்றே பாராது
வெந்துயரில் வீழ்த்தினான்
பஞ்சு பட்ட நெருப்பு
போல் போவதோ
சாகவோ
வேண்டாம்
துணிந்து நட..
வலிந்து கொள் ..
எதிர்த்து நில்..
ரௌத்திரம் பழகு

# விழியோடு மொழி பேசு

விழியோடு மொழி பேசிக்
கவியோடு கலந்தே
உறவாடி
காதலோடு கசிந்தே
கதை பேசிக்
களித்தாள் நங்கையவள்
கனிந்தேன் நானே

மொழியொடு கலந்தாள்
மென்னகையாள்
பொன்னகையாய்
மின்னுமழகில்
தன்னிலை மறந்தேனே
என்னிலை இழந்தேனே

காத்திருந்தேன்
எனது கவிதையாய் அவள்
பூத்த பூவாய் புதிதாய் இருந்தாள் ...
பார்த்தே பரவசமாகி
பாதியாய்ப்போனேனே

பெண்ணவள்
கண்ணசைவில்
விண்ணுலகம்
கண்டேனே
வர இயலாமல்
தவித்தேனே
தாவும் மரையென
ஆன மனதாய்

தத்தளிக்கும் மனதின்
தாகமது தீராதோ
மோகமது போகாதோ

தாமரை மலர் முகமதில்
மையல் கொண்டே
மயங்கியே தடுமாறியதேனோ

உருமாறிய எந்தன் மேனி
உனக்காக தவமியற்றியே
தவித்ததும் துடித்ததும்
தேவதை அறிந்திலள்
போன இதயம் போனதுதான்
வாராதினியே என்னிடமே...

# அதே இடத்தில்



காதல் என்றே
அருகே வந்தாய்

நீயே எனதுயிர்
என்றாய்

விட்டு விலகேன்
என்றாய்

ஆனால் சென்று
விட்டாய்

காத்துக்கொண்டு
அதே இடத்தில் நான்....
கண்ணீருடன்

# மதுரை சங்கத்தமிழ்ப்பூங்கா கவியரங்கில்...

அன்னைத் தமிழே
கன்னி மொழியே
அருமையெனவே
அழகுத்தமிழில்
கரும்பென இனித்திட
சுரும்பென நானே
அமர்ந்தேன்..
அமர்வு மூன்றனுக்காய்


தங்கமெனத் தமிழால் மின்னிடும்
சங்கத்தமிழ் பூங்காவிற்கு
தென்றலெனத்தாலாட்டி
சிந்து கவி பாடிடவே
வந்தேன் தென்றல் கவியென நானே...

வணக்கம்..

அரும்பு போலச் சொல்லெடுத்து
அடுக்கடுக்காய்ப் பாத்தொடுத்து
கரும்பு போலச் சொல்லெடுத்து
கற்கண்டாட்டம் பாத்தொடுத்து
இரும்பு போலச் சொல்லெடுத்து
எஃகு போல மனம் கொண்ட
பெரும்புலவர் பேரவையை
எம் பிள்ளைத்தமிழால்
வணங்குகிறேன்...

இனி தலைப்புக்கு வருவோம்...

# எரிதழல் கொண்டு வா



வீறு கொண்டெழு
வீணர்களைக்கண்டே
வேண்டா பயமுனக்கே

துச்சமென மதி
எதையும் எட்டிப்புறந்தள்ளு
உன் கவலைகளை

காத்துக் கிடக்கிறது
உலகு உனக்கே
உனக்காய்....

எழுந்து வா கண்ணே
ஏற்றம் காணலாம்
எட்டி வைத்தே நடை பழகியே
எட்டலாம் சிகரம் தனை

சித்திரமே பத்திரமாய்
பாதுகாத்துக்கொள்
உன்னையே

எத்திசையிலும் இருக்கலாம்
கயவர்கூட்டம்
கண்ணி வைத்தே

காத்துக்கொள்ள
உன்னையே
கற்றுக்கொள்...
தப்பித்துக்கொள்...

அடிமை கொண்டே
வீழ்ந்தது போதும்
அழுது கொண்டே
அடைகாத்தது போதும்

மதுரை சங்கத்தமிழ்ப்பூங்கா கவியரங்கில்...

பெண்ணே கலங்காதே
வெதும்பாதே

சீறியெழு சிங்கமென
பிய்த்தெறி கூரிய உகிர்களால்
வழியட்டும் குருதி
அடங்கட்டும் மனம்

வெந்து வெந்து சாதல் போதும்
நொந்து நொந்தே விதி வந்தால்
மாய்வோம் எனாதே...
நஞ்சு கொண்ட மாந்தரை
வேருடன் அழி

வெந்துயரில் வீழ்ந்திடாதே
பஞ்சு பட்ட நெருப்பு போல்
சாகவோ
வேண்டா
துணிந்து நட
வலிந்து கொள்...
எதிர்த்து நில்
ரௌத்திரம் பழகு
பழக்கு
கற்றுக்கொடு
உன் குழந்தைகட்கே
பாதகமில்லை....

சிறுமி என்றே பாராது
சிதறடிப்பான் பாழும் பாதகன்...
நெஞ்சு பதை பதைக்க

ஐயோ ...
தாங்கவில்லையம்மா
எரிதழல் கொண்டு வா...
எரித்து விடுவோம்...
வெஞ்சாம்பல் கூட வேண்டா இங்கே...



# அறிவு வளர் அகிலம் ஆள்

வளர்த்துக்கொள் உன்னையே
பெருக்கிக்கொள் அறிவை

சும்மா கிடந்தே சோம்பி இராமல்
வெந்ததைத்தின்றே விதி வந்து
மாய்வோம் என்றே இராமல்
படி படி நிறையவே
அறிந்துகொள்
தெரிந்து கொள்

அறிவாயோ
கண்டதைக்கற்றால் பண்டிதன்
ஆவானென்றே
வளர்த்துக்கொள்
விரிவு செய்தேஅறிவினை
ஆளலாம் அகிலம்தனை

சான்றோர் நிறை நல்நாடே நம்நாடு
இலக்கியமும் இலக்கணமும் இங்கே
பயின்றதே
பீடு நடை போட்டே

எத்தனை புலவர்கள்
எவ்வளவு பாடல்களிங்கே
செவ்வியல் தன்மையுடன்
செல்வமாயன்றோ
சிறப்புடன் இன்றுவரை

படி தெரிந்துகொள்
கற்றுக்கொள்
உயரு உயர்த்து
உன்னையும்
உலகையும்

ஆட்சி செய்
அழகுடனே.
கிடக்கும் உலகு
உன் காலடியில்
அறிவு என்ற
திறவுகோல்
திறக்கட்டும்
உலகை....

# விட்டு விலகாதே

வீசும் தென்றலின் வசந்தமாய்
உள் நுழைந்தவள்
உன் நெஞ்சில்
தங்கவே வந்து
இடம் கேட்டவள்
உன் கவிகளில்
குளிர்ந்து
நெகிழ்ந்தவள்
எல்லாமும்
உனக்கே
என சாசனம்
எழுதிக்
கொடுத்தவள்
செத்துச் செத்து
மடிகிறாள்
உன்
பிரிவையெண்ணி
எப்பொழுதும்
அவளுடன்
வசித்து க்கொண்டிரு
விட்டு விலகாது

# இதயம் பேசும் மொழிகள்

இதயம் பேசியதே
எனக்குள்
உன்னை அறிவேன்
உணர்வேன்
உன்னிலிருக்கும்
என்னை மறைப்பதேனோ

நிரம்பிய நீரைப் போல
எனக்குள் உள்ளவளே
என்னவளே
என்றைக்கும் கேட்குமே
எப்பொழுதுமே
உனது ஏகாந்தங்கள்

ஏட்டில் எழுதா
இலக்கியமாய்
நிறைந்தவளே
இணைந்தவளே
மெல்லிய இசையாய்
இசைக்கும் இனியவளே

ஏனடியோ
மாயங்கள்
செய்கிறாய்
மதியிழந்தே
மன்மதனென
நானே

உன் பின்னே
சுற்றிச்சுற்றி வருவது
புரியவில்லையா
இல்லை அறியவில்லையா
சாகசக்காரி

என்னிதயம்
கூறுவது கேளாயோ
பைங்கிளி
ஏங்கியே நிற்கிறேன்
தீர்ப்பாயோ ஏக்கமதை பாராதே
பரிதவிக்கவைப்பதும் ஏனோ
வேசம் போடும்
பாசக்காரி

விழிநிறை நீரூடன்
உளி கொண்டே அடிக்கும்.
இதயமுடன்
காத்திருந்த காதலனைக்
காணாயோ இரங்காயோ
சகியே என் சரசக்காரி

# முள்ளிவாய்க்கால்

## கண்ணீர் அஞ்சலி

முள்ளிவாய்க்கால் சரீரத்தின் சரித்திரம் அறிவீரோ
எரிந்தன உயிர்கள் பற்றியே எங்கெங்கும்
பறிக்கப்பட்ட தாலிகளுடன் பெண்கள் கண்ணீருடன்
சிங்களவரின் அடக்குமுறை ஆணவத்துடன் அரங்கேறியது

அராஜகம் கொண்டே ஏறிய மமதையுடன்
கெக்கலிப்புக்கொண்டே தலைவிரித்தேயாடியது
எங்கெங்கும் அழுகை அவலம் கூக்குரல்கள்
எரிமலையென எரிந்தது தேசமே பொங்கி

குண்டுகள் பொழிந்தன மே பதினெட்டில்
எண்ணிலடங்காப் பிணங்களால் மோடு கட்டிய பூமியாய்
அடங்கா குருதி தாகம் ஆர்ப்பரித்தே
அடங்கியதே குழந்தைகள் கூட மிச்சமின்றியே

# நினைவுகளில் நீ

கண்ணில் விழுந்த காட்சிகள்
என்னில் நிறைந்தே
ஏதோதோ சொல்கிறதே
எங்கேயோ அழைக்கிறதே

பாதக்கொலுசொலியாய்
பண்ணினை இசைத்தே
மனதில் பரவசமாகுதே
உரசுதே உருக்குதே உள்ளமதை

ஏனிந்த மதிமயக்கம் யாராலே?
கனிந்த பழமென
சுவைத்தே இனிக்குதே சுகிக்குதே
ரகசியமாய் ரசிக்குதே

அந்தி சாயும் அழகு வேளையிலே
மலரும் முல்லையென சிரிக்குதே
நெஞ்சில் பதிக்குதே தடம்

அடங்காதே நினைவினில்
கொள்ளை கொண்ட
எல்லையில்லா அன்பென
கள்ளமில்லா உறவாய்
களிக்குதே தினம் தினம்

யாருக்கும் தெரியாதே
எவருக்கும் புரியாதே
ஊருக்கே சொல்லி
பந்தி வைக்கத்தானாசை
பத்திரமாய் பூட்டியமனதாய்
எந்திரமென ஆனதேனோ
திறவாதோ தாழ்?
சொல் என் கண்மணி



# என் பேராசைகள்

எனது பேராசைகள்
எண்ணிலடங்கா
சொல்லியும் மாளாதே
ஏக்கமுடன் உரைக்கின்றேன்
கேளீர் மானிடரே

எனக்குப்பிடித்தவராய்
என்னைப்பிடித்தவராய்
அனைவரும் ஆகிடவே ஆசை

யாரும் என்னிடம்
முரண்படாதிருக்கவே
ஆசை

அன்பெனும் மழைதனைப்
பொழிந்தே அகிலம்தனை
ஆளவே ஆசை

ஒற்றுமையாய் உலகமே
உறவுகொள்ளவே
ஆசை

ஆறுகளாய்ப்
பெருக்கெடுத்து
புவிதனை
நனைத்திடவே ஆசை

புஞ்சையும் நஞ்சையும்
கொஞ்சும் பூமியென
மாறிடவே ஆசை

சிறு குழந்தையென மாறியே
துன்பங்களனைத்தையும்
மறந்திடவே ஆசை

பொறுமை மாறா நிலையுடனே
எதையும்
சகித்துக்கொள்ளும்
சக்திதனைப்
பெற்றிடவே ஆசை

அழகு மலர்களாய் மலர்ந்தே
மணம் பரப்பவே ஆசை

வண்ணப்பறவைகளாய்
மாறியே விண்ணில்
பறந்திடவே ஆசை

எந்நிலைவரினும்
தன்னிலைப்பிறழா
உள்ளமதைப்
பெற்றிடவே ஆசை

நான் என்றும் நானாக
இருக்கவே ஆசை

இன்னும் இன்னும் கொட்டிக்கிடக்கும்
ஆசைகளைப்பட்டியல்
போடவே இங்கே இயலாதே...

அனைத்தும் என்றும்
நிறைவேறா ஆசைகளே
இன்றைக்கும் என்றைக்கும்...

# அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்

அன்பே எல்லாமுமாய்
அன்பே அனைத்திற்குமாய்
அன்பே உயிரெனவே
அன்பே உலகையாளுமே
இன்றைக்கும் என்றைக்கும்

சாதிக்க முடியாததை
சாதிக்குமே அன்பு
தன்னிகரில்லாத் தாயன்பு
அம்மா பிள்ளை பாசமென
அழகிய உறவாய்
உருகி நிற்கும் உன்னதம்

அன்பு சுரக்கும் நீரூற்றெனவே
மாற்றிக்கொள்
உனையே
உலகமே உன் கையில்
வந்து நிற்கும்

அள்ளிக் கொட்டு சலிப்பின்றியே
காசா பணமா
என்ன வந்து விடப்போகிறது
காட்டு எதிரிக்கும்
மாற்றம் காணலாம்
அமைதிப்பூக்கள் பூக்கும்
பூங்காவனமென
மாறுமே மனது ...

உயிர்களிடத்தும் காட்டு
அன்பினையே
மகிழ்ந்து களித்தே
சிறு உயிரிடத்து காட்டும்
அன்பு நல்கலாம் பின்
பேருவகை

இருமனம் இணைந்து
திருமணத்தில் நிறைவுற்ற
இல்லற அன்பு...
இதிகாச காலம் தொட்டே
தொடருதே அழகியதாய்

ஒருவன் ஒருத்தி மேல்
கொண்ட மையல்
நிலைக்கட்டுமே
உண்மையாய்
எக்காலத்தும்

எதனையும் முடித்துவிடலாம்
அன்பெனும் ஆயுதம்
கொண்டே
மெய்யெனவாய் இருக்கும்
பொழுது
உள்ளொன்று வைத்துப்
புறமொன்று இல்லா
அன்பினைப்பூட்டி வைக்கத்தான்
முடியுமோ
வெளிப்பட்டு விடுமே
கண்ணீராய்....

# என்னுள் நீ

என்னுள் மிஞ்சிடும்
மோகனமே
கண்ணுள் கலந்திடும்
காவியமே

பண்ணிசைத்து
பாவங்கள் காட்டியே
மாயங்கள் புரிகின்றாய்
மனதில் பிடிக்கின்றாய்
இடம் மயக்கியே....

கனவினில் வருகிறாய்
கண்ணசைவில்
அழைக்கிறாய்

கிட்டே வருகிறேன்
எட்டியே மறைகிறாய்
சாலங்கள் ஏனோ
மாயக்காரியே

தந்திரங்கள் புரியாதோ
எனக்கே
மந்திரம் போட்டு நீ
மாற்றினாயோ
மன்மதனாய் என்
மன்னவளே

கண்ணிமைகள்
மறந்தனவே
இமைக்கவே
பெருகிய அழகைப்
பருகியே



கார்கால வசந்தமென
மேனி தொட்டாய்

தென்றலெனக்
குளிர்ந்தே
குளித்தேன்
உன்னில்

மோகனமே
விஞ்சினாய்
என்னையே
கொஞ்சம்
அன்பில்

மகிழ்ந்தேன்
கலந்தேன்
உன்னுடன்

மனங்கள்
இணைந்த
காதல்
களித்தது
இனித்தது
சுவைத்தது
அவனுக்கே



# உறைகின்றாய் நினைவுகளில்

யாரது அது என் நினைவுகளில்
சுற்றிச்சுற்றி வருவது?
சுற்றி வந்தே சுமையென
அழுத்துகிறாய் மனதை

ஏன் இப்படி வருகிறாய்?
காலையில் நீ
மாலையில் நீ.
மறக்கவே இயலாமல்
வந்து வந்தே என்னில்
நுழைகிறாய்

பேசாதிருக்க மாட்டாயோ
சும்மா வந்தே எனை
சோகம் கொள்ள வைக்கிறாய்

அடே வேண்டாமடா
எனக்கே விருப்பமில்லை
என்றேனே
பின் ஏனோ பின்னே
வந்து கொண்டே இருக்கிறாய்
தாய் கரம் பிடித்த
சிறு சேய் போலவே

உறக்கம் தொலைகிறது உன்னால்
சென்று விடு நீயே

கொள்ளையடிக்கப்பட்டு
விட்டதோ என்னிதயம் உன்னால்?
கன்னம் வைத்து விட்டாய் என்னை

நானோ தொலைத்து விட்ட
இதயந்தனை தேடுகிறேன்.
தொலைந்து என்னவோ உன்னில்தாம்
தருவாயோ திருப்பி எனக்கே
வைத்துக்கொண்டே தர மறுக்கிறாய்

சரி சரி வேண்டா எனக்கே
வைத்துக்கொள் நீயே
உன் நினைவுகளில்
நான் மட்டும் இருப்பின்
வைத்துக்கொள்
பாதுகாப்பாய்

சுகமாய்த்தானிருக்கிறது
என்னுள் உறைந்த
உன் நினைவுகள்

# கண்ணே

கண்ணே பொன்னே கனவிதுவாய்
கண்டே வந்தேன் மதுவெனவாய்

வண்டு  சூழ்ந்த மலரழகே
வாயென் அன்பே அருகினிலே

பெண்ணே  மல்லிக் கொடியழகே
பேசிப் பாடி மகிழலாமே

மண்டு சூழ்ந்த உலகினிலே
மன்னன் வந்தான் அவளிடத்தே
மையல் தந்தான் தையலுக்கே
தப்பிப்பிழைப்பார் யாரடியே...

# முற்றத்து முழு மதியே

முற்றத்தில் வீற்றிருந்தாள்
முழுமதியாய் நங்கையே
யாருக்காகக் காத்திருக்கிறாள்?
காதலன் வரவையெண்ணியோ?
வருகிறேன் என்றவனோ
இன்னும் வரவில்லை

காரணம்தான் என்னவோ
கலங்கிய விழிகளும்
பேதையவளுக்கு
கண்ணீரின்றி வற்றினவே

இதே முழுமதி நாள்
அன்றோ
அவனும் அவளும் களித்தது
நிலவறிந்த
கதையன்றோ

தென்றல் சாட்சியாய்
முற்றத்து மல்லிகையும்
மோகனமாய் நகைத்ததுவே
இவர்களின் நிலையறிந்தே

மெல்ல நாணிய இரவு
அங்கே போர்வையாய்
போட்டது பதியம் இவர்களுக்காய்

ஊர் மறைத்த காதலன்று
பேர் கெட்டு நின்றதுவே
சீரிழந்த பெண்ணாய்

வருவானென்று வழிபார்த்து விழி வைத்தே
காத்திருந்தாள் மன்னவனை நோக்கி

மாலை சூட்டுவேன் மங்கையே
வேலை பார்த்தே என்றவனும்
ஓடித்தான்  போனானம்மா

உறைந்த விழிகள் சலனமின்றி
சாகசக்காரனையெண்ணி
பார்த்து இருந்ததுவே
வந்துவிடுவான் எப்படியும்
என்றே முற்றத்து முழுமதியாய்
வீற்றிருந்தாள்
மங்கையும் அழுத விழிகளோடு

# உன்னில் என் நினைவுகள்

கண்களில் வழிந்த கண்ணீர்
கதைகள் கூறி
காதலைச் சொல்கிறதே
கண்ணே
காத்திருந்த
கண்மணியின்
கவிதை
உன்னைத்தேடுகிறதே
கண்ணீர் வழிகிறதே
உன்னில்
உள்ளதா
என் நினைவுகள்
மறந்துவிடாதே
பின் இறந்து விடுவேன்
இது கதையல்ல
நிஜம்

# எட்டிப்பிடித்தது

கருவாய் முகிழ்ந்தே கசிந்ததுவே நின்னுள்
உருவாய் வளர்ந்த உணர்விலுமாய் - பாரும்
விரும்பு கரும்பாய் விதியெனவே இல்லாத
அரும்பு விரிந்த அழகு

அவளே எனது அகந்தனிலும் வந்தாள்
இவளே எனக்கு இனிமையாக நின்றே
கவலை களைந்து கனவிலுமாய் நின்றாள்
அவளே அழகின் அழகு

பட்டுச் சிறகில் பறந்திடவே உள்ளமது
கட்டிக் கலந்தாடு கண்ணே கசிந்திட
எட்டிப் பிடித்திட என்முன் வருகுவையோ
கட்டவிழ்ந்த மான்போல் கனிந்து

கண்ணே கனவினிலே கண்டேனே செல்லாதே
வண்ணம் நிறைத்தாய் வடிவழகே கோதையவள்
எண்ணம் உறைந்தாள் எனினும் மறந்தேனே
கண்ணன் வருவான் கனிந்து

கண்ணன் வருவான் கனிந்து மலர்ந்தேயென்
எண்ணம் நிறைவுற்ற தேனோ அவனாலே
வண்ணம் மிளிர்ந்திடும் வந்தான் அழகனவன்
கண்கள் தெரித்த கனவு...

உன்னைச் சரணடைந்தேன் உன்னில் நிலைபெற்றேன்
உன்னை நினைந்தேன் உனக்காகவே - உன்னிலே
என்னில் வருகை ஏனோ புரிந்தாயே
என்னில் நுழைந்தாயே ஏன்?

காத்திருந்த உள்ளம் கவிதைகள் பாடியதும்
பூத்திருந்த பூக்கள் வதங்கியதும் ஏனடி
சாத்தியிருந்த மனம் சட்டென்று தாழ்திறக்க
யாத்திரைக்குப் போனேனோ யான்

நேற்று முதலாய் நெஞ்சினித்த காதலே
காற்று கலைத்தாலும் கண்ணீரில் மூழ்கினாலும்
தோற்று நடக்காதேப் போதும் தொடருமே
தூற்றி உரையாத் துணிவு

பார்த்த விழிகள் பரிதவிக்க பாசமின்றி
கோர்த்த மலரது கொட்டிய தேன் பாவையே
வேர்த்த உடலது வேதனை கொள்ளவே
சோர்ந்த நிலையதனைச் சொல்

உள்ளம் அழுவதேன் உன்னை நினைந்ததால்
வெள்ளம் நிறைந்ததேன் வேல்விழியே கன்னமெனும்
பள்ளம் பரவிப் பாய்ந்தது கண்ணீரே
அள்ளி எடுப்பாய் அணைத்து

சிவந்த மலர்கள் சிரித்து மயக்க
உவந்து சிலிர்த்ததே உள்ளம் தவழ்ந்த
இளந்தென்றல் மேனியெல்லாந் தீண்ட இன்பக்
களம் கண்டு பாடுகிறேன் காண்

அறமது செய்ய அகிலம் உயர்த்தும்
அறமது  என்றும் அனைவருக்கும் நன்றாம்
அறமது மக்களின் ஆருயிர்ப் பண்பாம்
அறமது செய்க அறிந்து

பூக்கள் அழகாய்ப் புன்னகை பூக்கவே
ஈக்கள் வருகை இசைந்ததால் - பூக்கள்
மலர்ந்தனவே என்னுள் மனமவிழ்ந்து வீசி
மலர்ந்தது முல்லை மலர்



# நாட்டின் வளர்ச்சிக்கு மாணவர்கள்

ஏடெடுத்தே பள்ளி செல்லும் தம்பி
பாடு பார்த்தே உழைக்கணுமே தம்பி
நாளைய நாடு இருக்குது உன்னைத்தானே
நம்பி இருக்குதே தம்பி தங்கத்தம்பி...

பாடங்களை நன்றாகத்தான் படிக்க வேண்டும்
பாவம் பிள்ளை நன்றாக வளருமென்றே
பரிதவிக்கும் அன்னைதந்தையுன் நினைவில் வரட்டும்
உன்னை எதிர்பார்த்தே இருக்கும் உன்உறவுகள்

தெரிகிறதா தம்பி உனக்கும் புரிகிறதா
பழக்கம் கொள் பழகிக்கொள் நன்றாகவே
உணர்ந்துகொண்டே செயலாற்று கடமைகளை..
உலகம் இருக்கும் பின் உன் காலடியில்

உண்மையாக வாழக்கற்றுக்கொள்
உரிமையை விட்டுக் கொடுக்காதே ஒருபோதும்
திண்ணமான முடிவு கொள் தீர்க்கத்துடன்
வன்மையில்லா வாழ்க்கையுடன் வாழுநீ எப்பொழுதும்

பொய்மை இல்லா மெய்மை கொள்
போலி இல்லா முகத்துடன்
கைநீட்டி வாங்காதே எவரிடமும் எப்பொழுதும்
பிறன்மனை என்றும் நீ நோக்காதே

அடகு வைக்காதே உன்னை எவரிடத்தும்
படகு போல் ஆட்டம் கொண்டவனாய்
மயங்காதே எதற்கும் கலங்காதே தடுமாற்றமின்றி
தயக்கமின்றி நிமிர்ந்து நில் நானென்றே... ஆம் நானென்றே

*ஊ.. ல.. ழ.. ள... காவியரங்கில்*

# எங்கும் இன்பமயம்

இன்பமயம் எங்கு நோக்கினும் இன்பமயம்
அழகிய உலகில்
அற்புத இன்பங்கள்
கொட்டிக்குவிந்தே
பெருகிக்கிடக்கிறதே
கவனிப்பார் யாருமின்றியே

துய்க்கத்தான் நேரமின்றி
ஓடுகின்றோம் வேலைகளால்
இவ்வுலகிலே..

யாருக்குத்தான் நேரமுள்ளது
கண்ணிருந்தும் குருடர்களாய்
காதிருந்தும் செவிடர்களாய்
எந்திரங்களாய் மனிதர்கள்..
மனித வாழ்வு....

சற்றே உங்கள் வீட்டுக்கொல்லைப்
பக்கம் பாருங்கள் அடடா !!!
எத்தனை எத்தனை பறவைகள்
வம்பளக்கும் அழகுக்காட்சி
எத்தனை எத்தனை வண்ணங்களில்
இறைவன் அளித்த
அழகுக்கொடையன்றோ

மனம் கவர் மீன்கொத்தி நீலவண்ணத்தில்
மினுக்கியே செல்லும்

நீலம் மர வண்ணத்தில்
பனங்காடையின் கூக்குரல் கரகரப்புடன்

அழகுக்கொண்டையை அற்புதமாய் விரித்தே
தரையைக்கொத்தும் கொண்டைலாத்தி

மரத்தில் அமர்ந்தே
துளையிட்டு பூச்சி
உண்ணும்
மரங்கொத்தி

மின்கம்பியில் அமர்ந்தே
கருப்பு வெண்ணிற சிறு
பறவையின் இன்னிசைக்கீதம்
கேட்டதுண்டா இல்லைப்
பார்த்ததாவது உண்டா?



அட யாரது அங்கே
திருட்டு நடையுடன்
அமைதியாய் சத்தமின்றி
ஓ!!!செம்போத்தா
அடுத்த பறவையின்
கூட்டில் முட்டையைக் திருடும்
காட்சி  கண்டதுண்டா நீவீர்?
கவனித்ததுண்டா?

முருங்கை மரத்தில்
அடையாய் அப்பிய
கம்பளிப்பூச்சியை
பிடித்து விழுங்குதம்மா நம்ம
கருங்குயிலம்மா

மாதுளையின் செந்நிற மலரில் மதுவருந்துதே
சிறு தேன்சிட்டு
கருமை பசுமை வண்ணங்களில்
கொள்ளை கொள்ளுதே நெஞ்சம் அள்ளுதே

இப்படியாய் கொட்டிக்கிடக்கும்
இன்பங்கள் கோடி கோடியாயிருக்க
வாருங்கள் மனிதர்களே
எந்திர வாழ்வை தூரப்போட்டு தூக்கியெறிந்தே...

# மலர்கள்



எனக்குள் மலர்ந்த
இம்மலர்கள்
நறுமணம் கமழ்ந்தே
ஏதோ செய்கிறதே
வண்ணங்கள்
என் எண்ணங்களை நிறைக்கிறதே
வியப்பில் ஆழ்த்துகிறதே
அழகாய் வந்தே
அமர்ந்து விடுகிறது
மனதில்
இறைவனின் அற்புதப்படைப்பு
இவ்வழகு
கொள்ளை போனது
நெஞ்சம்
தஞ்சமடைந்தது இதனிடத்தே
அடடா நானே பிறக்க வேண்டும்
அடுத்த பிறவியில்
மலர்களாகவே

# எப்போது வருவாய்

தூக்கம் விழித்து நான்
உன்னை என்னில் தேடுகிறேன்
ஏக்கம் கொண்டு வாடுகிறேன்
ஏனோ இப்படிச் செய்கிறாய்
கண்கள் உன்னைத் தேடுகிறதே
காதல் உன்னில் வரவில்லை
மேகம் மறைத்த நிலவென நீ
மாயம் ஏனோ செய்கிறாய்
இதயமிங்கே இருண்டிடுதே
நீயே எப்போதுதான் வருவாயோ

# எஞ்சியது எது?

இங்கே எஞ்சியது எது?
காடுகரை மேடெல்லாம்
செழித்த பூமியிது

கொஞ்சும் பசுமையில்
நெஞ்சம் நிறைந்து அன்று
பஞ்சமின்றியே

ஓடும் வாய்க்கால்கள்
பெருக்கெடுத்து
நனைத்தது பூமியை
நனைந்தது மனம்

செழுமையின்
சிலிர்ப்பில்
சிரித்தது நிலம்
மகிழ்ந்தது
மனித மனம்

பச்சைப் பசும் வயல்கள்
இச்சை கொள்ள
வைத்தனவே
மிச்சம் மீதியின்றி
அத்தனையும்
பெருகியதே
செல்வமாய்
நெல்மணிகளாய்.
சேர்ந்ததுவே
சேமித்தோமே

யார் கண் பட்டதுவோ
மழை பொய்த்தது
வறண்டது புவி
வெடித்தது



பாளங்களாய்
தண்ணீரின்றி
காய்ந்ததுவே

தண்ணீர் திறந்தவன்
இழுத்து மூடினான்
நீரோடிய வாய்க்கால்கள்
நீரின்றியே இன்று

விளைந்த நிலங்களோ
கிடக்கின்றன
விளைச்சலின்றியே
தரிசெனவே
விளைந்த இடங்கள்
வீடுகள் ஆயின
ஆயினவே

ஏழை உழவனின்
வயிற்றில் அடித்தது
இயற்கை

செயற்கை மோகம்
நிலம் நீர் மாசு
அழிக்கப்பட்ட
மரங்களென
மனிதனுக்கு
மனிதனே
வைத்தான் தனக்குத்தானே
சூனியம்

எஞ்சியது எது?...
கூறுவீர் மானிடரே?

# வழிபார்த்து...

உனை நினைத்து
உயிர் சுமந்தேன்
வந்தாய் கனவாக
உன்னுடனே
எப்போதுமென்றே
சொல்லிய வன்
காணவில்லை
சென்றுவிட்டான்
அவளை விட்டே
விழி பார்த்த காதல்
இன்று வழி பார்த்து
சென்றுவிட்டது
அவள் செல்லவில்லை
அங்கே நிற்கிறாள்
அவனுக்காய்
வருவானோ
காயம் செய்தே
மாயமான செய்திதான்
என்னவோ
ஏங்கித் தவித்த
கோதை காத்திருந்தாள்
பறிகொடுத்த
இதயமதை
திருப்பி
வாங்க இயலாமல்



# மனிதம்

மனிதம் மறந்தோமோ மண்ணிலே நாமும்
மனிதா அழிந்திடும் மண்

மனிதா மறந்தும் மயங்கி இராதே
மனிதம் மதிப்பாய் மகிழ்ந்து.

# கண்ணீர் சிந்தும் கனவுகள்

கனவுகள் இங்கே கற்பனையாய்
கண்ணீராய்த்தான் போகிறது.

நனவாகிடாதோ என்றே
ஏக்கம் என்னுள்
ஏங்கச்செய்கிறது.

நினைவுகள் எல்லாம்
நடந்துவிட்டால்
நாம் ஏன் இப்படி
கண்ணீர் வடித்தே
கானல் நீராய்?

பொழிய வேண்டும்
மேகங்கள் நிறைய வேண்டும்
நீர் நிலைகள் செழிக்க வேண்டும்
நமது நாடு என்றே
எனது கனவு
சிந்துகிறதய்யா கண்ணீரை
இப்படியே நிறைந்து விடுமோ
உப்பின் நீரால் கண்ணீரால்

நன்மைகள் நடக்கனும்
நல்லாட்சி புரியனும்
ஒற்றுமை நிலவனும்
சாதி மத பேதமின்றி
சமத்துவம் இருக்கனும்
என்ற கனவும்
கரிந்து விட்டதே
எரிந்து விடுமோ
எதுவும் நடவாமல்?

ஏதோதோ நடக்கிறது
என்னவோ நிலவுது
மனநிலை தவறிய
பெண் என்றே பாராது
செய்த கொடுஞ்செயல்
கண்டே நெஞ்சும்
பொறுக்குதில்லையே
இப்படியே...
அனைத்துமே கண்ணீர்
சிந்தும் கனவுகளாய்...



# தங்கமே நீயுறங்கு

தங்கமே நீயுறங்க
அள்ளியுனை அணைத்தே
அழகுக்கதைதான்
சொல்லியே
அம்மா வந்தேனடி
கண்ணுறங்காய்
கனியமுதே.
தொட்டில்
வழியாக
எட்டிப்பார்த்தே
சுட்டித்தனமென்ன
வட்டச்சிறு நிலவே
காற்று போதாதோ
பாட்டு போதாதோ
வேலை கிடக்கிறதே
கண்மணியே
கண்ணுறங்கு

# நிழலாய் நிந்திக்காதே

நிழலாய் உலவியே
நித்தமும் என்னையே
சுற்றி சுற்றி வருவதேனோ?
செல் என்றால்
செல்லாயோ நீ
பகலில் வருகிறாய்
பின் இரவிலும் விட்டு
வைப்பதில்லை ஏனோ?

தொல்லை செய்தே
நிந்தித்தல் சரியாமோ?
சொல் நீயே?

அமைதியான மனமிங்கே
அலைபாய்ந்தே
கல்லெறிந்த குளமாய்
ஆனதேனோ

கனவில் நனவில்
என்றே
பூ மழை பொழிந்து
புன்னகை புரிகிறாய்
புரியா மொழிகளில்
சிக்கியே
விடையறியா
வினாக்களாய் நான்..

மன்னவனே வாதனை செய்தே
வதம் செய்வதேனோ
என் மனதை

என்ன நினைந்து
இவ்வாறு செய்கிறாயோ

புரியவும் இல்லை
நான் தெளியவும்
இல்லை உன்னாலே

என்னுள் ஓடும் உன்
நினைவுகள்
நில்லாதோ
ஓடும் புரவியின்
ஓட்டமாய்
தறிகெட்டே
தத்தளிக்கச்
செய்கிறதே
என்னை

விட்டு விடு என்னை
வேண்டா உனது
பூச்சொரியும் நினைவுகள்

நிர்மலமான வானமாய்
மெல்லிய தென்றல்
என்னுள் வீசவே
வருவேன் உலா
நானே
தனிமையில்...

# மலரினும் மென்மை காதல்

காதலில் கரைந்தே கலந்து
பறந்த உன்னிதயம் என்னில் கண்டதோ
மலரின் மென்மை காதலென்று

# மௌனமே சாட்சியாக.

அவளிடத்தில் அவன்
என்ன பேசுகிறான்
ஏது பேசுகிறான்
யாருக்கும் தெரியாது
அவர்களும் அறிந்திடத்தானில்லை
ஆனால் ஏதேதோ....
தொடரும் கதையெனவே

தினம்தினம் நடக்குது
இவ்வாறே
சில நேரங்களில்
காலம் கடந்த பேச்சு
அவர்களுக்குள்
ஒருபோதும்
எல்லை மீறாத
அழகான உரையாடல்களாய்
அமர்ந்திருக்கும்.

பிடித்திருக்கிறது
இப்படிக் கதைக்கவே
இந்த காலத்தில்
இப்படி ஒரு நட்பு!!!!
நட்பா காதலா
ஆனால் இருவரும்
அறிந்திடதானில்லை.
ஆனாலும் அவனின்றி
அவளால் இருக்கதான் இயலாது
என்பதை உணர்ந்தாள்
ஒருநாள் பிரிவின் போதே

இவள் மனதின் ஓசைகள்
அவனறிவான்
அவன் மனதும் இவளிடம்....


நாற்காலி போட்டே
நாகரிகம் காத்தே
கைகட்டி அமர்ந்து இருக்க
பேசிக்கொண்டே
தொடரும் நாட்கள்
ஊமை நாடகமாய்

இப்படியாக
என்ன உறவிது
தென்றல் தொடும்
உணர்வுகளுக்கு
மௌனமே
சாட்சியாய்
வேலியிட்டுக்
காக்க அழகாய்
நகர்ந்து கொண்டே

முடிவு காலம்
பதில் சொல்லும்...

# மயக்கம்

உன்னிடம் மயங்கியே
தன்னையிழந்த நெஞ்சம்
வந்தே என்னிடம் ஒட்டிக்கொள்ள
கண்விழித்தது கவிகள் பகர்ந்தது
நெஞ்சம் நெகிழ்ந்தே வா என்றது
தஞ்சமடைந்து சரண்புகுந்தது
கொஞ்சும் தமிழாய்
சிலிர்த்தது மகிழ்ந்தது
தாமரையாய் இதழ்விரித்து
அழகாய் மலர்ந்தது
மயங்கியது மயக்கம் தந்தது.
மதி நிறைந்து
அவனே கதி என்றது



# கண்ணில் தெரியும் கதைகள்

கண்ணில் தெரியும்
கதைகள் என்னவோ?
கண்டுபிடி பார்க்கலாம்.
என்னவென்று?
ஏதென்று?

யார் மனதில் என்ன
உள்ளதோ?
எவரவறிவர்?

நல்லவையோ
கெட்டவையோ
ஆனாலும் விசித்திரம்தான்
மனித மனம்.

எப்பொழுது எங்கே செல்லும்
எவர் பின்னால் என
கண்டறிய இயலுவதில்லை...
எப்பொழுதும்...

அடங்கா மனம்
பலநேரங்களில்
தப்பிதமாய்க்
கற்பித்துக்
கொள்கிறது...
தன்னைத்தானே.

தான் செய்வது
சரி என்றே
வாதிடுகிறது
தன் மனதிற்குள்ளாகவே


நீண்டு செல்லும் உறவுகள்
நிழலாய்த்
தொடருகின்றது...
மனதையும் வசப்படுத்தியே
வசமாக்குகிறது...

சில
தப்பிக்க நினைந்தாலோ
இயலுவதில்லை
போலி முகங்களாய்ச்சில
மெய்யெனச் சில
பொய்யெனச்சில.

நல்லவிதமாக நடக்க நினைந்தே
தலையை ஆட்டி வைக்கிறது.

ஒன்று மட்டும் புரிகிறது
எவரிடமும் இல்லை நேர்மை என்றே

அனைத்தையும்
காட்டிக்கொடுப்பது
என்னவோ
கண்கள் தாம்...
ஒவ்வொருவரின் கதைகளும்
தெரிகிறதே விழிகளில்.
கண்டுபிடி
எது நிசமென.....
எது விசமென......



# அவளும் நானும்

யாரிவள்?ஆம்
எதற்காய் என்னுள்
வந்தாளிவள்?
தெரியவுமில்லை
புரியவுமில்லை
அவளோ என்னை
விட்டே அகலவுமில்லை
பிரியவுமில்லை
இருக்கிறாள் எப்பொழுதும்
என்னுடனே
சிரிக்கிறாள்
ரசிக்கிறாள்
என்னையே
ஆனால் சில நேரங்களிலோ
கோபமும் கொள்கிறாள்
பிறகோ சமாதானமும்
செய்கிறாள்
என்னை விட்டே
அகன்றாளில்லை
தமிழாய் அமுதாய்
இனிக்கவும் செய்கிறாள்
என்னுள் நிறைகிறது
இவளின் மணம்
மெல்ல மெல்ல
உணர்கிறேன்
இவளின்றி நானில்லை
என்றே..
என் மூச்சில் கலந்தவள்
என்னுடன் ஒன்றானவள்
வருவாளோ இறுதிவரை?

# தூரிகை தேசம்

என் தேசமிது
தூரிகை தேசம்
நான் மட்டுமே
பயணிக்க
நினைக்கும்
தேசமிது...
எவருக்கும் அனுமதி இல்லை இங்கே
என் வண்ணக்கனவுகள்
வரையப்படுகின்றன.
எனக்குப் பிடித்த நிறங்களில்...
நான் மட்டும்
காணவே...
பலபல நிறங்களில்
நீல வண்ணத்தில்
கொஞ்சும் பசுமையாய்
செம்மை நிறத்தினதாய்
வெண்மையாய் என...
பல நேரங்களிலோ
கருமையாய்ப் போய்விடுகிறது
மன அமைதி கெட்டே...
என்னையும் மீறிய
அத்துமீறல்...
உள்ளே நுழைந்தே
ஆட்டி வைத்தே
செய்யும் அட்டூழியம்...
அழகிய ஓவியங்கள்
ரசிப்பதாய்க்கூறியே
சேற்றை வாரி இறைக்கப்பட்டே
பாழ்படுத்தப்பட்டு
சிதறடிக்கப்படுகின்றதே
ஆனாலும்
என் தூரிகைகள்
நிறுத்தப்படுவதில்லை
வரைந்து கொண்டே

வரைந்து கொண்டே
இருக்கின்றது...
கண்ணீருடன்...
அவை எனக்கு மட்டுமானவை...
எவருக்கும் உரிமையில்லை
ஆம் எவருக்கும்...



# ஹைக்கூ

பூட்டிய வீட்டில்
பேச்சுக்குரல்
பாப்பாவோட டோரா

வீடுகள் தோறும்
குரங்கு வளர்ப்பு
ஒற்றைப்பிள்ளை



தேன் தேடும் வண்ணத்துப்பூச்சி
தேடி அலையும் நான்
கவிதைக்குள் உயிர்?

மருதாணியின் சிவப்பு
கூடிக்கொண்டே செல்கிறது
வெட்கம்

கல்லறைகள் நிரம்பி வழிகிறது
வீதிகளில் பிணங்கள்
அடக்குமுறை

# பனிவிழும் மலர்வனம்

பனித்துளி சொட்டி பரவிய மலர்
மலர்ந்தது மணம்வீசியே

வண்ணங்களில் மின்னிய அதனழகு
எண்ணங்களில் நிறைத்தது

செடியின் உச்சியில் பூச்சிகரம்
எட்டிப்பறிக்க நினைந்தது...

வண்டு அமர்ந்ததே வாசித்தது
சங்கீதம் அங்கே

கொஞ்சுமெழில் நெஞ்சு நிறைக்க
மெல்லவே சென்றது மனம் மலர் வனத்தில்

பூக்களாக மாறவே ஆசை கொண்டது
இச்சை கொண்டே மயக்கிய பச்சைச்செடிகள்
கொடிமலர்கள் பின்னிப் பிணைந்திருக்க
கண்டேன் சொர்க்கந்தனை
அங்கே... கொண்ட கோலம்
மறந்தே தனையிழந்தேன் நான்...

இப்பொழுது மலர்களின்
நறுமணம் என்னுள் வீசிக்கொண்டே
நாசியைத்துளைக்கிறது.
நகர மறுக்கும் இதயம்
நுகர்ந்தது மலர் மணத்தை

பனி இன்னும் பெய்து கொண்டே இருக்கிறது...

# வண்ணத் தமிழ் பெண்ணொருத்தி என்னெதிரில் வந்தாள்

வண்ணத்தமிழாய்
வாசனையாய் வஞ்சிக்கொடி
வந்தாள்...
தஞ்சமென நானே

கொஞ்சுதமிழில்
விஞ்சியே மஞ்சம்
விரித்தாள்
நெஞ்சம் நிறைந்தாள்
கரைந்தேன் நானே

சந்தமொழிகளில்
சிந்தை கவர்ந்தே
சொந்தமானாள்.
விந்தை பல புரிந்தே
பந்தமொன்று
எழுந்தது பணிந்தது
படித்தது என்னை
பறந்தேன் நானே

எந்தன் மனதில்
காந்தள் மலரானாள்
கனிந்தாள் களித்தாள்
சிவந்தாள் சிரித்தாள்
தவித்தேன் நானே

உள்ள மொழியழகை
கள்ளவிழியதனால்
எல்லையின்றி

நான் ரசிக்க....
விழுந்தேன் அவளிடம்
இன்னும் எழத்தானில்லை

வெள்ளை நிறத்தழகில்
கொள்ளை கொண்டே
மெல்ல எனையிழந்தேன்
மகிழ்ந்தேன் நானே
ரசித்தாய் நீயோ?

சிறு விதையென ஊன்றிய காதலின்று
பெருமரமாய் வளர்ந்ததுவே
எழுந்தேன் பேருரு கொண்டே
அடைந்தேன்
விண்ணை நானே
எட்டட்டும் எனது சிகரம்
தட்டட்டும் வெற்றி முரசு

கண்ணசைத்து
வெண்ணகை சூடி
வண்ணத்தமிழ்
பெண்ணொருத்தி
என்னெதிரில்
வந்தாள்
கவிதை பல தந்தாள்

# கற்பனை ஊற்று

எண்ணம் நிறைத்த வண்ணக்கற்பனை மீண்டும் வந்தது
கண்ணில் நூறு கவிதைகள் என்னில் தந்தது
மண்ணில் அழியா மரகதச்சொற்கள் அழகாய்க் கோர்த்தது
உண்மை மறைத்து கற்பனை வாழ்த்துகள் மொழிந்தது

# உனக்காக ஒரு கவிதை

உனக்காக ஒரு கவிதை
எழுதினேன் எனதன்பே உனக்காகவே...
என் மனதில் வரைந்தேன்
உனக்காக

அழகியதாய் எனது கவிதை என்னுள் உனக்காக...

தெரியுமா உனக்கு?
நீ அறியாது வரைந்தேன்
ஆனால் உன்னால் முடியும்
அதை வாசிக்கவே

நீ எனக்கானவன் என்பது உண்மையெனில்
உன்னால் முடியும் வாசிக்கவே

நீ நேசிப்பது நிசமெனில்
உன்னால் வாசிக்க இயலும்
என்னையும் எனது கவிதையையும்...
உனக்கானது அது என்பதையும்....

வாசி அன்பனே நேசி
நமது கவிதையை....

உனக்கான எனது கவிதையில்
என் மெல்லிய உணர்வுகள்
புரிகிறதா?
தெரிகிறதா?
வருடும் தென்றலின்
சுகமதை உணர்ந்தாயா?
உணரலாம்..நீ எனக்கானவனாயிருந்தால்....

நீ வந்து செல்லும் அந்த சில தருணங்களில்
என் மனத்தோட்டத்தில்
மலருகின்றதே பல

வண்ண மலர்கள்
வாசனை வீசியே
மீண்டும் மலருமா
கருகுமா ?
அதை நீதான் சொல்ல வேண்டும்...
சொல் இப்பொழுதே...

இதோ இப்பொழுதும் புனைகின்றேன் கவிதை
உனக்கெனவே

வாசித்து விடு முழுவதும்
நேசித்து விடு என்னையே
நீ நான் என இருவர்
மட்டுமே நமது கவிதையில்...

உன் மனதிடம் கேட்டுப்பார்
அது சொல்லுமே நமது கதையை...

# தென் பொதிகைச் சாரலிலே

தென் பொதிகைச் சாரலிலே தவழ்ந்து வந்து தென்றலிது
மென் மயக்கம் கொண்டது மகிழ்ந்தது
தன்நிலை இழந்தது தாகம் கொண்டது
என்னஇது ஏனிப்படி ஆனது? யாரறிவர்

தன்வழியே போனதை தாமரை என்றனன்
உன் முகம் காணவில்லை எனில்
ஊனுறக்கம் செல்லாது என்றவன் மறந்தனன்
விண்ணுலகத் தேவரும் கண்டு மயங்க

கவின் மிகு காதல் காணாமல் போனது
எண்ணமெலாம் அவளாக இனித்தவள்
இன்றோ வேம்பெனவே கசந்தனள்
தென் பொதிகைச்சாரல் தென்றலின்றி வாடியதே

# கவிதையே தெரியுமா

எனது கவிதை நீயடி
ஆம் நீயேதான்
என்னை மாற்றினாய்
நான் மாறினேன்
நான் நானாக இல்லையடி
உனக்கே சரண்
நின்னடிகளே சரண் என்றே

தினம்தினம் உன் நினைவால்
எனை மறந்தேனடி...
நித்தம் நான்
தொலைந்தேனடி உன்னுள்

சத்தமின்றி என்னுள் நுழைந்து
சாகசம் செய்கிறாய்
சங்கல்பம் செய்வேனடி
நீதான் எனக்கு என்றென்றும் என்றே...
வருவாயோ என்னுடனே
எனது கவிதையே...

என் மன ராகங்களின்
மாயவித்தைக்காரியே
மீட்டும் உனதிசையில்
நனைந்தேன் முழுவதும்
கேட்டுக் கொண்டே இருக்கும் உனது
ராகங்கள் முடிவின்றியே

ஏட்டில் எழுதா என்னுள்
நிரம்பிய உனது கவிதைகள்
ஏதோதோ செய்கிறதே
எங்கேயோ போகுதே
கட்டி வைத்துக்கொள்கிறேன்
கண்மணி உன் மனதை

ஏகாந்த வேளையும்
ஏக்கம் கொள்ள வைக்கிறதே
பாதாதிகேசமாய்
பார்த்த விழிகளும்
பத்திக் கொண்டதே
சுத்தி வருகுதே
சொர்க்கமாய் ...

எழுதாக் கவிதையும்
எழுதப்பட்டதே
என் மனதில்...
கவிதையே தெரியுமா
நீதானடி எனக்கே
எப்பொழுதும்
என்றென்றும்



# தாயன்பு

பாலூட்டித் தாலாட்டி...
தனை மறந்து தன்பிள்ளை
தனக்காயென தவித்து
பாசம் ஒன்றே வேதமாய்
பரிதவித்த தாய்மை...
ஊனிழந்து உணர்விழந்து
உயிரையும் தரும்...
சீராட்டியபிள்ளையால்
சீர்கெட்டு எறியப்பட்டு
முதியோர் இல்லங்களில்..
ஆதரவின்றி அனாதையாய்
ஆனபோதும்.. அகலாது.
பிள்ளையை நினைக்கும
தாயன்பு எப்பொழுதும்
மாறாதே.... மறையாதே...

# ஏன் இப்படி ஆனேன்?



ஏனிப்படி ஆனேன் நானே
ஏனிப்படி?
உறக்கம் தொலைந்து
உணர்வுகள் மழுங்கி
ஏனிப்படி ஆனேன்
நானே ஏனிப்படி?
பார்க்குமிடங்மெங்கும்
உனது பிம்பம்
தோன்றும்
வியாபித்திருக்கும்
உடல் முழுதும்
வியர்க்கும் பரபரக்கும்
ஏதோ ஒன்று அழுத்தும் மனதை
உலகமே ரசிக்கத்தோன்றும்
அழகாய்த்தெரியும்
அத்தனையும்
கிட்டே வந்தால்
பேசத் துடிக்கும்
எட்டே போனால்
மனம் துடிதுடிக்கும்
முகம் அழகாய்
மிளிரும்
தன்னிலை மறக்கும்
பறக்கும் இதயம்
மெல்லிய தென்றல்
வீசும் எப்பொழுதும்
பாடல்கள் அனைத்தும்
இன்பமாய் இசைக்கும்
காதல் வந்தே கலந்ததாலோ
தலைகீழாய் மாறித்தான்
போனதே அனைத்தும்
ஆம் அது அப்படி ஆனதாலே

# என் தேடல் நீ

என் தேடல் நீயே
எனக்காகவே
வாழும் நீ
என் தேடலாய் வந்ததை அறியாயோ?
காற்றும் உன் பெயரை
என் காதில் வந்தே
உச்சரித்துச்சென்றது.

கடலுந்தன் அலைகளால்
அள்ளித்தந்தது
நன்முத்தாக உனையே

வான் பறவையும் நீ
எனக்கானவன் என்றே தூது
செல்லவா என வேண்டியது...

எனக்குள் குளிர்ந்த
குளிர் நிலவாய் நீ

வண்ண மலர்களும்
உன் நினைவுகளை
வாசனையாய் என்னுள்
தெளித்தது

மீட்டும் நாதமாய்
இசையென இசைத்த
உன் பாடல்கள்

இப்படியாய்
என் தேடலாய் நீ
எனக்குள் வந்ததை
அறியாயோ நீ

# காதலின் எழுத்தாணி

எண்ணங்களை வெளிக்காட்ட
உதவுகிறாய் வண்ணங்களாய்
வாழ்வை மாற்றுகிறாய்

நல்லவர் தீயவர்
உணர்த்துகிறாய்

நடிகர்களை இனம்
காட்டி நகர்கிறாய்

நாளெல்லாம் உன்னுடன் இருந்தவர்
இரகசியம் பேசிட
உதவினாய்

நாளொரு மேனி
பொழுதொரு வண்ணமாய்
நடக்கும் நாடகத்திற்குத்
துணை போகிறாய்

இறுதியில்
கண்ணீரைச்சொரிய
வைக்கிறாய்

வெண்பஞ்சு இதயமும்
முள்ளென
மாறிட முன்
நிற்கிறாய்

சிரிக்கிறார்
ரசிக்கிறார்
பகிர்ந்து கொள்கிறார்
தன் உணர்வுகளை
காதலைச்சொல்கிறார்
மாற்றினார்...



மாறினாள் நங்கையும்
பாசம் கொண்டே

நீதான் என் உலகம்
என்றே அழுத்திச்சொன்னவர்
பிறகோ அனைத்தும்
வேடிக்கை என்றே
மாயமாய் மறைகிறார்

ரணமாய் மனது
வேதனை கொள்ளவே
இதுவரை பேசிய
எழுத்தாணி
கொண்டது
மௌனம்
காரணம்தான் என்ன?
புரியாமல்
விழிக்கிறாள் மங்கையும்....

# மயக்கும் இராகங்கள்

மயக்கும் ராகங்கள் - இது
மனது நிறைந்த மோகன கீதங்கள்

மாயை கொடுத்த மன்மத வேடங்கள்
மந்திரம் செய்து மயக்கிய நாதங்கள்

மோகவலையில் வீழ்த்தியே மேகமாய்
கலைந்த காதங்கள்

இனி நகராத உள்ளம் நகர்ந்தது
நம்பிக்கை கெட்டே

மயக்கம் தெளிந்தே மதிநிறைந்த
மங்கல வேதங்கள்

# விடியலைத்தேடு

விடியலைத்தேடு
புலராத பொழுதுகள்
இனி புலரட்டும்..

விடியாத இரவுகள்
விடியட்டும்

எழு... இதோ
உனது உலகம்
உனக்கானதாய்க்
காத்திருக்கிறது..

முடியாதது எதுவும் இல்லை
முயற்சி கொள்...
முடியும் அதிசயம்
காண்பாய் பிறகு
உனக்குள்ளே

விரட்டு தீமைகளை
தேடி வரட்டும்
உன்னையே
நன்மைகள்..

விளைக்காதே
விதைக்காதே
பாதகம் தனை
சாதகமாய் வரலாம்
வேண்டாம் அல்லாதன


மனிதநேயம் வளரட்டும்
கொடுத்துப் பழகு
பிறர்க்கு....
எடுக்க நினையாதே

வலியோர் நீயாக இருக்கலாம்
மிதிக்காதே எளியனை....

சுற்றியிருக்கும்
அகஇருள் விலக்கி
உன் புறவெளி
புத்துயிர் பெறட்டும்

# நீலத்திமிங்கலம்

நீலத்திமிங்கலம்
விழுங்கியது
இளைஞர்களை
உத்தரவுகள்!!!
கட்டளைகள்!!!
செல் மலை உச்சிக்கு.
இல்லையா மலை
வேண்டாம் கவலை
இருக்கிறது மொட்டைமாடி.
குதி - பதிவிடு.
மரணப்பரிசு உனக்காய்.
விஞ்ஞானத்தேடலிதுவோ?
கூர்மழுங்கியதா உனதறிவு?
வேண்டாமய்யா...
தேடு பயனுள்ளவற்றை
பதிவிடு இணையத்தில்.
யார் தடுத்தது?
காத்திருக்கிறது வாழ்க்கை
இனியதாய்...



# கிராமத்து அத்தியாயம்

நீர் ஓடிய வாய்க்கால்கள்
கார்காலத்துச்செழிப்பு.
பசிய வயல்கள்;
காற்றிலாடும் பயிர்கள்.
நகரும் நத்தைகள்
ஒய்யார நண்டுகளின் ஓட்டம்
ஒற்றைக்காலில் நிற்கும் கொக்குகள்
பறந்தன தன் பிள்ளைக்குருகு தேடியே.
பார்த்த விழி பார்த்தபடி
நகர மறுக்கும் நத்தைக்கொத்திகள்.
மெல்லிய தென்றல்
சில்லென வீசும்
மாலைப்பொழுதுகள்...
களையெடுத்த பெண்டுகளால்
கலகலக்கும் கழனிகள்...
முந்தானையில் மூட்டைக்கட்டிய
கடலைக்காய்கள்
அடுப்பில் கொதித்த
குழம்பின் மணம்.
தாலாட்டுப்பாடும் தாயன்பு.
தனியளாய் காத்திருக்கும்
தலைவியின் காதல்.
பருவச்சிட்டுகளின்
ஏகாந்த வேளைகள்.
பச்சைமாமரத்தின் பசிய நெடி.
சில்லெனப்பூத்த முல்லைகள்
சிறார்களின
ரயிலு வண்டி ஓட்டம்.
ஒரு கொடம் தண்ணி ஊத்தி
ஒரு பூ பூத்த கதைகள்.
இவ்வாறாய்
வெண்ணிற இரவுகளாய் மின்னிய..
எங்கள் கிராமத்து அத்தியாயங்களிவை.

# மௌனப்பூவே மயக்கமென்ன?

மௌனப்பூவே மௌனப்பூவே
மயக்கமென்ன
இதழ்விரித்தே வாசனை வீசு
தயக்கமென்ன

சின்னவிழிக்கு வண்ணமொழிக்
கவிதைகள் நூறு
எனக்கெனவே வரைந்தாயோ
எடுத்துக்கொண்டேன்
நான் எனக்கெனவே

வார்த்தைகளில் வசந்தம்
கொட்டி சந்தம் சிந்தி
சொந்தம் கொண்டாடியே
பந்தமாய் வந்தவனே

உள்ளச்சிரிப்பைக்
கள்ள விழிகள் உரைக்குதே
ரசிக்கிறேன் மறைக்காதே

வெல்லப்பேச்சும், செல்லச்சிரிப்பும்
மெல்ல எனைக்கொல்ல
மத்தளம் கொட்டுதே
மனசு மயக்காதே

மௌனப் பூக்களில் வீசிய தென்றல்
எடுத்துச்செல்லுதே
உன் வாசம் அந்த
வண்ணப்பூச்சிகளின்
அழகிய வண்ணங்களாய்
வரைந்த ஓவியங்களாய்...

# பசுமை மாறா நினைவுகள்..



சிறு வயது நினைவுகள்
மனதில் பொத்தி வைத்த சித்திரமாய்...
தொலைந்து விடா நினைவுகளாய்
தொடுத்த கணைகளாய்
மனதில் இன்றும்...

கூரையில் கொட்டிய
மழை நீரில் நனைந்து
அருவியில் குளித்ததாய்
மகிழ்ந்த நியாபகம்

கண் சிவக்க ஆற்றிலாடி
ஆத்தாவிடம் வாங்கிய
அடி நியாபகம்...

வற்றிய ஆற்றுச் சேற்றுநீரில்
பிடித்த கெண்டைகள் நியாபகம்

சீத்தாப் பழத்திற்கு ஏங்கிய சிறுமியாய்
அம்மா கொடுத்த
ஐந்து பைசாவில் தீர்ந்த ஆசை நியாபகம்.

நாவல் பழங்கள் பொறுக்கி
மடியில் கட்டி - கட்டியப் பாவாடை
கறையான நியாபகம்...

காய் பறிக்க மரத்தில் ஏறி
கீழே நின்ற பாபுவைப்பார்த்து
பதைத்து குதித்த நியாபகம்

என எத்தனை பசியநினைவுகள்
அழகாய் தொலைந்து விடாமல்
இன்னும்.....

# வாராயோ வெண்ணிலவே

வாராயோ  வெண்ணிலாவே
பாராயோ என்னை நீயும்

தாராயோ நின்னெழிலைக்
கொஞ்சம் பஞ்சமோ
உன்னழகு?
நெஞ்சம் நெகிழ
தாராயோ நீயும் வெண்ணிலாவே

வேறாரோ வந்தே வேடிக்கைப்பார்க்க
விளையாடத்தான் நீயும்
போவாயோ
எனக்கும் கொஞ்சம் காட்டலாமே உன்முகம்
வெண்ணிலாவே இந்தப்பெண்ணிலவுக்கு

நான் உனக்கே பாமாலை
தினம் சூட்டுகிறேன்
தேமாவெனவே இனிப்பாயோ
எனக்கே தான்

காலையில் மறைந்தே
மாலையில் மலர்கிறாய்
காலைத் தாமரையும்
மாலை அல்லியிடமும்
சொல்லி வை
என் காதல் அந்த ஏந்திழைக்கேயென்று

இரவில் உலாவி
என்ன நீ கண்டாயோ
என் வெண்ணிலாவே
சொல்லேன் அனைவருக்கும்
என்னவளைக்காணவே
போகிறேன் என்றே

போகும் வழியில் தென்றலுடன்
மகிழ்ந்தே
நீயும் செல்...
குளிர்ந்த உன்முகம்
மேலும் குளிரட்டுமே

பூக்களுடன் பேசியே
கொஞ்சம் வாசனை வீசியே நீயும் செல்
அவளும் உன் வாசம் உணரட்டுமே

முற்றத்து வெளியில் வீசிய வெள்ளொளியில்
கற்றறிந்த பெருமக்கள் கவிபாடவே
களிப்படைந்துக் காதலாகிக்
கசிந்தாயோ வெண்ணிலாவே

# வலியோடு ஒரு பயணம்

வலியோடு ஒரு பயணம்
எப்பொழுதும் தொடர

ஏதோ ஒன்று அழுத்துகிறது அதிகமாக...

பாரம்நிறைந்து கனக்கும் நெஞ்சாய் உள்ளுக்குள்ளே
வழியும் கண்ணீர் ரகசியமாக எவருக்கும் தெரிவிக்காதே
குறையில்லா மனித வாழ்வுதான் ஏது?
நிறைவு மகிழ்வு இல்லா மானிட உலகம்
உழல்கிறது ஏதேனும் ஒன்றை
இழுத்துப்போட்டுக்
கொண்டே  கவலையில்
தொடர்கிறது பயணம் வலியினூடே முடிவின்றியே..

# வீரம்

எங்கள் வீரம் எப்படி?
சங்க காலம் முதல் இன்று வரை
நாங்கள் கண்ட வீரம் இதுவே!!!
மதுரைக்காஞ்சி கண்ட வீரம்.
இமயத்தில் கல்லெடுத்து கண்ணகிக்குச் சிலை
வைத்த வீரம்...
ஆயிரம் ஆனைகளைக் கொன்றவனுக்குப்
பரணி பாடிய வீரம்...
ஈழம் வரை சென்று வென்ற
எம்கோன் வீரம்..
முறம் கொண்டு புலி தன்னை
விரட்டிய எம் மறத்தியின் வீரம்...
ஏறு தழுவியவனையே மணம்முடித்த
மங்கையின் வீரம்.
இன்றோ வந்து நிற்கும் கயவர்களை நெஞ்சு
நிமிர்த்தி
எதிர்க்கும் எம் குலப்பெண்டிரின்
பயமில்லா வீரம்...
ஆண்களுக்கு நிகரான தமிழச்சியின்
தன்னிகரில்லா வீரம்...
என்றே வீரம் செறிந்த நன்னாடிதுவே...

# அன்பு

அன்பு உலகத்தை ஆளும் அதனாலே
அன்பின் வழியில் அடங்கு

இரக்கம் உயிர்களிடம் இன்றேல்
மனிதா
சுரக்குமோ அன்புச் சுழல்

# பூஞ்சோலைப் பூத்தது பொன்னெழில் பூரிக்க

பூஞ்சோலை பாக்கள் புதிதாய் அரங்கேற
வாஞ்சையுடன் இங்கே வரவேண்டும் - தஞ்சையிலே
நெஞ்சையள்ள  முள்ளிவாய்க்கால் நேரில் அழைக்கவே
பஞ்சமிலா பாக்கள் பரிந்து

மஞ்சம் விரித்தது
சந்தம் நிறை
சிந்து கவிகள்
நெஞ்சம் நிறைக்க
எழுந்தது நிறைந்தது
வளர்ந்தது

கொஞ்சும் அழகிய குழுமத்தில்
பஞ்சமின்றி பாவலர்கள்
பாக்கள் புனையவே
விஞ்சியதே சீர்மை வியந்திடத்தான்
விண்ணளவும்

இணைந்தனரே
பிணைந்தனரே
இருகரம் கூப்பியே.....
கவியுலகப்
பூஞ்சோலைதனிலே

அணைத்திடுவோம் நாங்கள்
அன்புடன்  அனைவரையுமே....
வருக வருக என்றே

வாழ்த்துங்கள் நீவிரும்
வாழிய வாழியவேயென்று



# நெடுந்தூரப்பயணம்

நான் செல்லும்
நீண்ட நெடும் பயணம்
ஒரு மழைக்கால இரவில்
சில்லென்ற காற்று
சுகம் தர
மெல்லியப்பயணம்
தொடர...
வாடைக்காற்றின்
வாசம் கொண்ட
அவ்விராப்போதில்
ஈரக்கூந்தலில்
சூடிய மல்லிகை
மயக்கும் மணத்தில்
தொடரும் பயணம்
சுகமாய்...
முடிவில்லா இரவுகள்
தொடர...
வைரமுத்துவின்
வைர வரிகள்
வசந்தமாய்
பாடல்களாய்
இசைக்க
இசையில் நனைந்த
இதயமாய்
தொடரும் பயணம்
முடிவற்று...
மனதை மயக்கும்
துணை அருகிருக்க
முடிவற்றப் பேச்சுகள்
தொடரும்...
முடிவில்லாப்பயணம்...
சன்னலோர பேருந்து
இருக்கையில்



சாய்ந்து கொள்ள
அன்பான தோள்...
அருகில் இருக்க
கார்காலத்துப
பயணம்...
சிந்திய சிறு
மழைத்துளிகள்
மேனியில் பட்டு
மோகனம் பாட...
ஏகாந்த வேளையின்
ஏக்கங்கள் தீர்க்கும்
நெடிய பயணம்...
சிறு சிறு சிலிர்ப்புகள்
குறு குறுக்க
குழந்தைத்தனமாய்
குதுகலிக்கும் மனது
கும்மாளமிட
தொடரட்டும் பயணம்
வானம் கூட
தொட்டுவிடும்
தூரமாய்!!!
இப்பொழுது எனக்கு...

# காதல்

சட்டென வரும்
ஒரு நொடியில்...
பட்டென சொல்லத்துடிக்கும்.
துணியாது...
மெல்லிய தென்றலாய்
மனதில் வீசும
எப்பொழுதும்
சுகமாய்...
கண்ணீர்த்துளிகள்
சொந்தமாகும்.
துடிக்கும் இதயம்
நடிக்கும் மனது.
விழித்துக் கொண்டே
கனவு காணும்...
கவிதைகள் வரும்...
உறக்கம் வாரா
இரவுகள் நீளும்...
நினைவில் நில்லாது
எவையும்...
இப்படியாய்
மனதில் அழகாய்
வந்தமரும்
அற்புதமோ
இக்காதல்!!!

# தென்றலின் வீதியில்

தென்றலின் வீதியில்
மணம் பரப்பும் மலர்கள்
மலர்ந்தே மனம் கொய்கின்றது
பல நேரங்களில்...

இதமாக குளிர் காய்கிறது
சிலநேரங்களில்
புயல் வந்த
வனமாக மாறுகிறது
பல நேரங்களில்

மரம் கொத்திப்பறவையாக
மனதைக்கொத்தியே
வதம் செய்கின்றது
பதம் பார்க்கின்றது...
தினந்தினம்...

வருடும் காற்று காதில் ஏதோ சொல்ல
மெல்ல நழுவுகிறது மனம்
எங்கேயோ பறக்கிறது
இங்கே நான் என்கிறது

வாசனையில் லயித்தே
ஆனந்தமாக
விருப்பம் கொள்கிறது
தானும் தென்றல் தழுவும்
மலரென முகிழ்க்கிறது

வண்டூதும் மலர்கள்
நிரம்பிய வீதியிங்கே
காட்சியளிக்கிறது
கொள்ளையழகாக

நகர்ந்து கொண்டு இருக்கிறது.
நாட்கள் அமைதியாகவே
தென்றல் வீசியே

ஆனால் சில நேரங்களில்
ஏனோ...
மலர்ந்த மலர்கள்
கொய்யப்படுகின்றன.
வீதி வெறுமையாக...
தென்றல் மணமின்றிப்
பயணிக்கின்றது...

இதன் பொன்வீதிகளில்
அருவியெனப்பாயும்
நீரால் வெள்ளக்காடாய்
ஆனபோதும்.

மீண்டும்
எழுந்துவிடுகிறது தென்றலின்
வீதி நறுமணத்துடன்...
அதே குதுகலத்துடன்...
மாறாது...



கொத்து மலர்ச்சரம்
கொள்ளையிட்டது
மனதில்மலர்ந்தது
மயக்கம் தந்தது
எண்ணியது
இன்றே இச்செடியை
வைத்தே வளர்ப்பேன்
பறிப்பேன் மலர்கள்
நிறையவே
தொடுப்பேன்
அழகிய
மாலைதனையே


# யாரது நெஞ்சை அள்ளிப் போனது

குவளை மலர்
கண்ணழகி
கொஞ்சும் மொழிப்பேரழகி
வெள்ளைச்சிரிப்பு
கொள்ளைக்காரி
நெஞ்சையள்ளிப்
போனாளே....

அவளை நினைத்து
ஏக்கம் கொண்டேன்
கவலை கொண்டேன்
காணாமலே
குவளைத்தண்ணீரும்
இறங்க மறுத்தே
மயக்கம் கொள்ளும் மாயமென்ன?

அஞ்சுகமே
பஞ்சுமெத்தைப்பாய்
விரித்து பாசத்துடன்
பரிதவித்துக் காத்துக்கிடக்கும்
மாமனவன் மனச கொஞ்சம் பாரடியோ

இலவு காத்த கிளி போல
காத்து தான் நானிருக்க
பூத்த கொடிமுல்லைப்பூவாய்
நீ மணக்க
உன்னைச் சூடிக்கொள்ளும்
அந்தநாள் தான் எந்தநர்ளோ
இப்ப வருமோ
எப்ப வருமோ ஏ ஏ ஏ
கருப்பு சாமி நீ வந்து காருமய்யா
நல்லவழிதானிங்கு கூறுமய்யா



# சின்ன சின்ன தூறல் என்ன!

சின்னச்சின்ன தூறல் என்ன
என்னை உரசும் சாரல் என்ன
மெல்ல மெல்லத் என்னைத்தொட்டு
சொல்லா சுகத்தை
அள்ளிக்கொடுக்க

மண்ணின் வாசம்
மனதை மயக்க
எண்ணமெல்லாம்
வண்ணக்கோலமிட

கண்ணில் சொட்டியது
ஓர் துளி
பிறகோ
முகத்தில் பட்டது
கையில் பட்டது
காதில் பட்டது
வழிந்தது உடலில்
நனைந்தது இதயம்...
காதல் கொண்டே


சில்லிட்ட உடலும்
சொல்லிடா ஆசைதனை
நினைந்தது
உள்ளமது மகிழ்ந்தது
வெள்ள நீரில் காலை
நனைத்து துள்ளியது...

மண்ணிற்கு அழகு
மழைத்துளி
என்னில் விழுந்து
கண்ணசைத்து

இதழ்கள் சிரிக்க
முத்து மழைப்
பொழிந்தது
மோகனமாய்..
என்னுள்

கத்தும் தவளையின்
ஆனந்தக்கும்மாளத்தில்
நகர்ந்தது மாலைப்பொழுது
மழைப்பொழுதாய்

## ராசாத்தி மனசுல



இந்த ராசாத்தி மனசுல
வந்த ராசாதான் ஆரோடி?
சொல்லடி என் பைங்கிளி

துடிக்கும் உன் இதயம்
சொல்லும் சேதியதை
நானறிவேன்
இரக்கமில்லா இரவுகள்
சொல்கிறதே உனது சேதியை

உறங்கா கண்களும்
உரைக்கிறதே
உனது ஏக்கந்தனை

அடே அரும மகராசா
நீயும் கொஞ்சமிங்கே
வாருமய்யா.....
உன் அழகு மகராணிக்கு
மஞ்சத்தாலி முடிஞ்சி
மவராசி குறையக்கொஞ்சம் தீருமய்யா

# கஜா

கார்த்திகையின்
கீற்றுகள்
மின்னலாய் வெளிச்சக்கீறலிட
இருண்ட உலகம்
சற்றே தெரிந்தது.
கற்றை நிலவு
ஒளியில்.

சற்று முன்...
உயிர்ப்பிழைக்கவே
மாடி வீட்டுக்கே
ஓடிய குடும்பத்தில்
இருவரைக் காணவில்லை...
எந்த தென்னைமரம்
எவர் மீது விழுந்ததோ?

விடிந்தபிறகே
தெரிய வரும் அந்த கதை....

வீட்டை விட்டே
அசையா அஞ்சுகம்
சுவர் விழுந்தே
ஆனாளே ஜீவ சமாதி

ஊழித்தாண்டவமாய்
சுழன்று அடித்தகாற்று
தீர்த்துக்கொண்டது
தனது தாகம்தனை

நெடிய ஒற்றைப்பனை
மட்டைகள் மட்டுமே உதிர்த்துவிட்டு
மீதமிருக்க

மொட்டை மரங்களாய் சில
ஒடிந்து பாதியாய் சில
முனை முறிந்து சில
வேருடன் சாய்ந்தவை பல
சிதறிய காய்களும்
இளநீகளும் மட்டைகளுமாய்
முறிந்த மரங்களின் மீதி
இல்லங்களின் மேல்
குவிந்து கிடக்க
அலங்கோலப்படுத்திச்
சென்று விட்ட இயற்கை...

மனிதா இயற்கையை
விடுத்தாய் அழித்தாய்
நீயே...
உன்னை அழித்தது அது
ஆம் உன்னை...

குடிப்பதற்கோ நீருமில்லை
உடுத்திக்கொள்ளவே
உடையுமில்லை
இருக்க இடமுமில்லை
படுக்க பாயுமில்லை

அடித்தகாற்றில்
சுருட்டி பந்தெனவே
கிழிந்தே படுத்த வேலியின்
மீதே கந்தலாய்...
உடுத்தும் துணிகள்

நேற்று வாங்கிய அரிசி
சகதியுடன் வீடெங்கும்
இறைத்துக்கிடக்க
மேற் கூரையின்றி...
வஞ்சம் தீர்த்துக் கொண்டது
இயற்கை ....

# நீலப்பூக்கள்

நீலப் பூக்களில் நித்தம் தொலைந்த மனசு
மீண்டு வர நினைந்தும்
முடியா.. நிலையில்

கொத்து மலர்கள் கொடியிலமர்ந்தே
கொடுக்கும் ஓராயிரம் சுகம் எப்படிச்சொல்வேன்!!

என்னில் நுழைந்த
இவ்வண்ணம் இன்பந்தனைக் கொடுக்க....
இறைவனின் அழகியப்படைப்பு...!!!



இத்தனை அழகை கண்கள் நிறைத்து
எனனுள்ளம் மகிழவே எனக்கென
மலர்ந்தாயோ? நீயே!!!

# பட்டுக்கன்னம்

குட்டிக்குழந்தை
மொட்டவிழ் மலர் போல்
மென் நகை புரிய
பட்டுக்கன்னம் தொட்டுக் கொஞ்சவே
கிளர்ந்த ஆசையைக்
கட்டுப்படுத்திட எண்ணி
தோற்றுதான் போனதே
கொட்டிக்கிடக்குமிந்த
கொள்ளையழகிற்கு
பக்கம் வந்தே அள்ளி
எடுத்தே கொடுப்பேன்
ஆசை தீர பல நூறு முத்தம்
இந்தகுட்டிக் கண்ணனுக்கே



# சுகமான சுமைகள்

சுகமாய் சுமந்த நினைவுகள்
யுகங்கள் கழிந்திடினும்
காலங்கள் பல நகர்ந்திடினும்
இனிக்கும் சுமைகள் சுகமாய்

கருவிலே உதித்த குழந்தை
பத்துத்திங்கள் வளரும் பொழுதின்
தாய்மையின் சிறப்பினழகு
மிளிரும் முகத்தில் பெருமிதமாய்

அழகு ரதம் அடியெடுத்து
வெளிவரும்  அப்பொழுதைய
தருணங்கள் தெரியின்
புரியும் தாயினருமை
ஆண் செய்யான்
பெண்ணுக்கு கொடுமைதனை

பெற்றெடுத்த தாயின் சேய்க்கு
தருமவளின் பாதுகாப்பு
சிறிய இடர்ப்பாடுகளைக்கூட
தாங்கவியலா அவளின் துடிப்பு
யாரறிவரோ...?
சுமையும் சுகமாய்த் தெரியும்
தாய்மையினாலே



# சமூகமே விழித்திரு

சமூகமே விழித்திரு
நல்லதொரு விடிய ல்
நலமாய் விடியட்டும்
ஆகாசம் தொடு
உன்னைச்சுற்றி கொஞ்சம் உற்றுப்பார்
பூகம்பமாய் வெளி வரும் பிரச்சனைகள்
தீர்க்க முயற்சி செய்
முடியுமே உன்னால்
தண்பெண்டு தன் பிள்ளை
என இராதே
பிறர் பிரச்சனை
எனப்புறந்தள்ளாதே
கற்கள் இருக்கிறது
செதுக்கு உளி கொண்டு
வருவது சிலையாய்
இருக்கட்டும்
முயற்சி கொள்
முன்னேற்றப்பாதை
உனக்காய்...

# எது கவிதை?

கொட்டிய செங்கல்லாயிருக்கும்
கவிதைக்குள் சொற்கூட்டமோ கவிதை?

தேன் தேடும் வண்ணத்துப்பூச்சியாய்
கவிதைக்குள் உயிர் தேடுவதும்...

உள்ளத்தே உணர்வது ஊற்றெடுக்க
சட்டெனத் தெறிக்குமே ஓர் மின்னல் அது  கவிதை...

# அலை கடல் ஓசையாய்...

ஆர்ப்பரிக்கும் அலைபாயும்
மனசு ஓயாமல்
இன்ப துன்பம் எது வரினும்
இதன் ஓசை மட்டும்
ஓய்வதுமில்லை
ஒழிவதுமில்லை
கேட்டுக்கொண்டே எப்பொழுதும்
நிற்காது நிலைக்காது
சிறு துன்பத்திற்கே
சிந்தை இழந்து  தடுமாற்றம்
ஏனிந்த நிலை
அடங்காத்தன்மையாய்
அடி வயிற்றில் எழும்
ஏதோ ஒன்று
சுற்றிச்சுற்றியே சுழன்றே
ஓங்காரமாய் ஓலமிட்டே
இந்த ஓசை என்று தீரும்?
துன்பங்கள் தீரப்போவதில்லை
அலைகடலும்
அடையப்போவதில்லை அமைதி
ஏன் முடியாது
மனிதா முயன்று பார்
அடக்கலாம்  அலைகடலையும்
நடக்கலாம் இதுவும்.



# அலைகள் ஓய்வதில்லை

அலைகள் ஓய்வதில்லை
நம் மனதும் மகிழ்ச்சி கொள்வதுமில்லை
எப்போதுமே

ஏதேனும் காரணங்களை நெஞ்சில் உழன்றபடி
பஞ்சு கொள் நெருப்பெனவே
பற்றும் துன்பங்களுக்கும் குறைவேதுமின்றி

பணமில்லை என்பதே
பெருந்துயராய்
எவ்வளவு வந்திடினும் போதா எண்ணமிருப்பின் என்
செய்வது?

எல்லாமிருக்கும்
ஆனால்
ஓயாப்பிணி
ஒழியாது
ஒட்டிக்கொண்டே
தின்றுவிடும்
வாழ்வுதனை

சரி பிணியில்லை
குறையா வளமை இருக்கும்
மனமகிழ்வு தேடி
அலைவான்
ஓயா அலைகடலாய்...
இப்படித்தானே மனித வாழ்வு செல்கிறது...
இந்த அலைகள் ஒருபோதும்
ஓய்வதில்லை...

# புகைத்தலை ஒழித்து விடு

கரிந்த வாழ்க்கையென
சரியும் வாழ்வு
புகைக்காதே புகை
நமக்குப்பகை
நகைப்பான் காலன்
பின் எடுப்பான் உயிரைத்தானே
உனக்கு இருக்கிறதே குடும்பம்
யார் வருவார் பின்?
கண்ணீரில் கரையும்
வாழ்வு கலையும் நீரில்
அழியும் கோலமென
எனக்கென்ன வந்தது
சொல்வதைக்கேளாமல் போனால்
இன்றைய சுகம் நாளைய ?
குருதி செல்லா இடமாய்
அடைபட்டுஅடைக்கப்பட்டு
படிந்த புகை கரியாய் மாறி
மறைக்கப்பட்ட வழியாய்...
இடித்து விடும் வாழ்வெனும்
கோவிலையே ...
வந்து விடும் பிள்ளைகளும்
நடுத்தெருவிற்கு
தூக்கிப் போடடா
உயிர்க குடிக்கும் தூண்டிலை!



# நிலாப்பெண்ணே

ஒளிர்ந்தது முகம் நில வாய்
ஏனிந்தக் கொள்ளை அழகு?
அவளுள்!!!
ஒ! வந்ததோ காதல்.
சிவந்த முகம் சிரிக்கிறதே
பெண்ணிலா
வெண்ணிலா ஆன மாயம்..
ஜாலம் செய்தவன் யாரடி?
எப்படி வந்தது
இத்தனை அழகு?!!!
நிலவென சிரிக்கும்
ராதையே
வந்த கள்வன் யாரோடி?
கண்ணனோ?!
நிலாப்பெண்ணின்
நினைவுகளில்
இனிக்கும்
இளமை
இரவில் மிளிர்ந்தது
ஏகாந்தமான
நிலவாய்...

கவியுலகப் பூஞ்சோலையில்
முதல் சான்றிதழ் பெற்ற கவிதை



கவிஞர் தென்றல் கவி

# உன்னைச்சிந்தித்தால்

உன்னைச்சிந்தித்தேன்
உருகியே உள்ளம்நிழல்
சுமக்கும் நெஞ்சில்
வந்தது யாரோ
குளிர் தருவென
வளர்ந்தது பொழிந்தது
அன்பைக் கொட்டிய
விழிகள் சொன்ன சேதி என்ன?

திறந்து பார் மனக்கதவை
தெரியாத செய்திகள்
தெரியுதா புரியுதா

வெளிச்சக்கீற்றுகள் நுழையவே
தருவாயோஅனுமதியே......

கோடையில் நிழலென
குளிர்ந்த நிழலாய் வந்தாள்
அள்ளிச்சென்றாளே

தாகம் தணிக்க வந்த நீரெனவே
மெல்லென வீசும் குளிர்தென்றலாய்
வீசிச் சென்றது யாரோ
என்ன பேரோ

வீசிய ஒற்றைப் பார்வை யில்
மொத்தமும் தொலைத்தேனே
என்னையே...

வருவாளோ தருவாளோ தன்னை
இதமாய்ச் செய்திகள் கூறவேண்டும்
பதமாய் என்னைத்தரல் வேண்டும்...
பாசமொழிகள் பகர்ந்தே....

- கண்ணதாசன் சான்றிதழ்

# மேவிய காவிரியே தாவி வருவாயா?

காவிரியே பூவிரித்த
உன் பொழுதுகள்
போயினவே
சீரிழந்து
நாவறண்டு ....
சாக்காடுதானென
பாழ்பட்டே

இதுதாம்
விதித்த விதியோ
மதியிழந்த மானிடராலே
எங்கே போயின?
யாவையும்?
சூழ்ச்சியும் வஞ்சகமும்
சுற்றி வந்தே
சூறையாடுதே
பறி போகுதே..

எல்லோரும் ஓர்நிறை
எல்லோரும் இந்திய மக்களென
பறை கொட்டியவன்
உரை பொய்யென
ஆனதோ

பிறந்த இடம் விட்டு
வளர்ந்த இடம்
மறந்து போனதே
மறைந்து போகுமோ
இல்லையென ஆகுமோ?

அன்றைய நிலை
இன்றைக்கு வருமோ
பெறுமோ நிலையாய்?

பெருக்கெடுத்த
நீரில் துள்ளிய சேல்கள்
ஓடினவே செழுமையாய்
பொங்கினவே
பெரு வாழ்வு
மகிழ்வாய்...


இன்றோ அடி வயிறு
பற்றி எரிகிறதே
குளிர்ந்த பூமி
கொஞ்சும் பசுமை
நிறைந்த உழவனின் மனம்
போனதே பாலையாய்

வெந்தணலில் வாழும்
மனமாய்
சந்தனத்தென்றலின்று
கொட்டும் எரிதழலென
ஆனதே
கூழுக்கும் வழியின்றி
கொள்ளைப்போகுதே
மனித உயிர்கள்
மரித்தே

ஏ காவிரியே வா தாயே
மானிடப்பதர்களை
துவம்சம் செய்தே
புறப்படு வா
காத்திருக்கின்றோம்
கண்ணீருடன்
உன் வழி பார்த்தே...

- கண்ணதாசன் சான்றிதழ்

# சிறகடிக்கும் ஆசை



சின்ன சின்ன ஆசைகள்
சிறகடித்தே
சிலிர்க்கச்செய்தே
சிங்காரமாய் என்னுள்
சிறு நகை புரிகிறதே

சிவந்த சிறு
பெண்ணின்
சிறுநுதல்
குங்குமத்தீற்றலாய்
மின்னிடவே ஆசை..

பறக்கும் வண்டென மாறி
பூ இதழ் நுழைந்தே
தேன் ருசிக்கவே ஆசை..

நீலக்கடலிடத்தே
நீந்தும் பெருமீனாய்
மாறி நீந்தியே  வலம்
வரவே  ஆசை

சோலைக்குயிலென ஆகி
சுகராகமிசைக்கவே ஆசை

மாலை வெயிலொளியில்
தங்கமென மின்னியே
மேகங்களில் என் முகம்
புதைக்கவே ஆசை..

கொட்டும் மழையென மாறி
பூமி குளிர்ந்திடவே ஆசை..
சொட்டும் நீர்த்துளியாய்
நானாகவே மாறிடஆசை

வெண் பஞ்சு மேகமென மாறி
விண்ணில் உலவிடவே ஆசை
மன்னும் மலையென
மாறி நிலை கொள்ளவே ஆசை

ஓடும் நீர்நிலையாய்
புவியெங்கும் ஓடி
பசுமை கொஞ்ச
வைக்கவே ஆசை

பெரும் மரம்தன்னிலே
தொங்கும் பழமென
மாறி பறவைகள் என்னிலமர்ந்து
பசியாறவே ஆசை.

கொஞ்சம் தமிழென மாறி
நெஞ்சம் நெகிழ்
பாமாலை பலவாய்
மணக்கவே ஆசை..

மரம் நிறை கானகமாய்
மழை கொடுக்கவே ஆசை

எத்தனையோ ஆசைகள்
சிட்டுக்குருவிச்
சிறகெனவே பறந்திடுதே
என் மன வானில்
கற்பனையாய்...
களி நடம் புரிந்தே...

- கண்ணதாசன் சான்றிதழ்



# எரிந்தது நூலகமா? இல்லைத் தாயகம்...

எரித்தாயோ நீ?
மரித்து விடுவோம் என்றே நினைத்தாயோ?
எழுந்து நிற்போமடா

எரிந்தது எம் தமிழ் அல்ல
எழுந்ததே வீறு கொண்டே
இன்னும் இன்னும்
உயரே உயரே
எழும்புவோம்...
எங்கள் சிறகுகள்
பறக்கும் உயரே

எம்தமிழ் வாழும்
எரித்தால்
அழிந்து படுமோ?
கருகி விடுமோ?

அடேய் பாதகா
எப்படித் துணிந்தாய்?
இதோ பொங்கிப் பிரவாகமாய்
வருவது தெரிகிறதா?
பார் கண் கொண்டே ..

சுவடிகள் அழிந்து படலாம்
எழுந்து நிற்பதைக்
காணாயோ
எப்படித்தெரியும் உனக்கே?
தெரி யின் செய்திருப்பாயோ
இழிசெயலை..மூடனே

மூழ்காதத்தமிழ்
மூத்தத்தமிழ்
முந்திபிறந்த
பைந்தமிழடா
பாதகா...

ஆயிரத்து தொள்ளாயிரத்து
எண்பத்து ஒன்று
புகையாகிப்
போயிருக்கலாம்
போட்ட விதை விருட்சமாய்
வளருமே வளர்க்குமே
நற்றமிழை...

கை கொண்டு மறைக்க இயலுமோ
ஆதவன் ஒளியதனை?...

உளி கொண்டே உடைப்பாயோ
பெருமலையினை?

தடி கொண்டே அடித்தே
பழுக்க வைப்பாயோ
கனியதனை?
எம்மொழிதனை
சாய்க்கத்தான் இயலுமோ?

பார்த்துக்கொள்
சாரை சாரையாய்
புறப்படும் எறும்புதனைப்போல
வருவோம்... புறப்படுவோம்
உயர்வோம்
வீழோம் எப்பொழுதும்...

# தமிழ்ப்புத்தாண்டின் வரவேற்பு

வந்ததே புத்தாண்டு
புதியது படைக்கவே
பழையன கழித்து
பகைமையை விரட்டி
பசிப்பிணியகற்றி
பார் சிறக்கச் செய்திடுமே

ஊர் சிறக்கவே
பேர்பெறவே
படைக்கலாம்
புதுயுகம்தனையே
படைத்திடுவே

கொலை கொள்ளை
சூது அகற்றியே
செல்லலாம்
நேர்வழிதனிலே

சீர்பெற்று
சிறப்புறவே
செய்திடவே
வந்தது புத்தாண்டு!

யார் வரினும் செய்திடுக
நல்லாட்சிதனையே
கார்பொழிய
மரம் நட்டிடலாம்

ஊர்செழித்து
ஏர்ப்பிடிக்க
உழவன் மனம் குளிர
நிரம்பட்டும்
நீர்நிலைகள்..

விட்டுக்கொடுத்து
உதவிடுக
என்ன கெட்டது?
அள்ளிக்கொடுக்க
வேண்டாம்
கிள்ளிக்கொடுக்க
கற்றுக்கொள்..

போலி முகம்தனை
அகற்றி இயல்புகொள்
வருமே புத்தாண்டு
நல்விதமாய்...
உனக்கே என்றுமே

# இன்னிசை வெண்பா

வண்ண மலரிது வண்டும் அமர்ந்ததே
உண்ண நினைத்தே உறிஞ்சியது - தேன்துளியை
எண்ண நினைவுகள் எல்லாம் இனிதினிதாய்
மண்ணின் அழகில் மகிழந்து.

பட்டுப் பருவமது பாடி மகிழ்ந்தது
சிட்டுக்குருவிச் சிறகினைப்போலவே
க ட்டற்றுப் பாடும் கவிதை இசைமழையே
குட்டி வயதுக் குறும்பு.

பட்டுச் சிறகில் பறந்திடவே உள்ளமது
கட்டிக் கலந்தாடு கண்ணே கசிந்திட
எட்டிப் பிடித்திட இங்கே எழுந்துவா
மட்டற்ற அன்பால் மகிழ்ந்து

# குளிர் தரு

நிழல் சுமக்கும் நெஞ்சில்
வந்தது யாரோ
குளிர் தருவென
வளர்ந்தது பொழிந்தது
அன்பைக் கொட்டிய
விழிகள் சொன்ன சேதி என்ன?

திறந்து பார் மனக்கதவை
தெரியாத செய்திகள்
தெரியுதா புரியுதா

வெளிச்சக்கீற்றுகள் நுழையவே
தருவாயோ அனுமதியே...

கோடையில் நிழலென
குளிர்ந்த நிழலாய் வந்தாள்
அள்ளிச்சென்றாளே

தாகம் தணிக்க வந்த நீரெனவே
மெல்லென வீசும் குளிர்தென்றலாய்
வீசிச் சென்றது யாரோ? என்ன பேரோ

வீசிய ஒற்றைப் பார்வை யில்
மொத்தமும் தொலைத்தேனே என்னையே...

வருவாளோ தருவாளோ தன்னை
இதமாய்ச் செய்திகள் கூறவேண்டும்
பதமாய் என்னைத்தரல் வேண்டும்...
பாசமொழிகள் பகர்ந்தே...

# தொடரும் தவங்கள்

தொடுத்த கவலைகள்
தொப்பூழ்க்கொடி உறவாய்
தொடர்ந்து வருமே என்றென்றும்

தவமாய் தவமிருந்து
பிள்ளைச்செல்வம் பெறவே
பெற்றே அதை சீராட்டிப்பாராட்டி
கண்ணுள் மணியெனக்காத்து
காத்தும் படாது கவலையில் உழன்று
கைப்பிடித்து தூக்கி விடவே
துயர் பல தாங்கித் துடிப்பாளே அன்னை

வளர்ந்த பிள்ளையோ எட்டி உதைக்கும்
மனைவியின் சொற் கேட்டுப்பெற்ற தாயவளை

தாயுமதை பொருட்படுத்தா உள்ளத்தினளாய்
வருவாளே வலம்...
தன் பிள்ளையென உவகையோடு...

தொடர்கதையெனத் தொடரும்
தனக்கே என்ற எண்ணமில்லா மாக்கள்
பிறகே உணர்வர் தம் மடமையினை...

நற்குழந்தைப்பெறவே தவம் பெற்றே
சீராய் வளர்க்கவே நற்றவம்...

நன்றாய் வளர்ந்தே
கொண்ட பிள்ளை கலைக்குமே இத்தவம்
இப்படியாய் தொடரும் தவங்கள்
தொடர்கதையெனவே...

# மழை



மழை மழை அடைமழை
குளிரெடுக்கவே
உடை நனைத்து
மேனி தொட்ட
மழையில்
சிலிர்த்தது மனம்
நெகிழ்ந்தது கொஞ்சம்...
எத்தனை நாட்களுக்குப்
பிறகே இவ்வருகை...
மண்மகள் சிரித்தாள்
குளிர்ந்தாள் மகிழ்வுடன்
தாகம் தீர குடித்தாள்
தனக்குள்
ஒரு வருடக் காத்திருப்பு
நீர்த்துளிகளை
தாங்கிய இலைகள்
எடுத்துக்கொண்டது
வேண்டிய அளவு
கதவுகள்அடைத்து
சன்னல் வழியே
கொட்டிய மழையை
ரசித்தபடி கொறிக்கத்
தேடுகிறது வறுத்த
சூடான கடலையை...
பெய்யட்டும்
பெய்யட்டும்...
நிறையட்டும்
நிறையட்டும்...
எங்கெங்கும்

# பெருமரம் தாங்கும் வேர்...

பெருமரம் தாங்கும் ஆணிவேர் இதுதான்
உயிர் ஆழம் தீண்டும் உணர்வுகள் இவையே
வான் வரை பரந்தே
பரந்து கிடக்கும்
கிளைகள்
ஊன் வரை இறங்கும் உணர்விதுவே
ஏனென்று தெரியுமா
தாங்கி நிற்கும் ஆணிவேரெனையே
அசைக்கவும் முடியுமோ?
அசைத்தலும் ஒண்ணுமோ?
யார் வந்து தடுப்பினும்
அசைகிலேன்...
என் வேர்கள் இருப்பது மண்ணில்தாம்
செல்லரிக்க இயலாதே
செழித்து நிற்பேன்
தாங்கிப்பிடித்த
வேர் வழியே...
ஊர் வம்பு உலக வம்பு
ஏதும் செய்யலாகாது எனையே
அசைக்க இயலா நம்பிக்கை
வசை பாடினும் இசையென
எண்ணி துச்சமென
மிதிப்பேன்..
தாங்கும் ஆணிவேர்
விழுதுகள் இருக்கையில்
விழுவேனோ?
எழுவேன் உறுதியாய்...

# ஏர் முனைக்கு நேரிங்கே எதுவுமேயில்லை

ஏர் முனைக்கு நேரிங்கே எதுவுமேயில்ல
புரிந்து கொண்டாயோ
நீதானிங்கே
தெரிந்து கொண்டாயோ
செழித்த பூமி இதுவே
காய்ந்தது...
காய்ந்தது
வறண்டனவே வாய்க்கால்கள்
நீரின்றி
வாராத்தண்ணீரைக்கண்டு
வருந்தாதே புலம்பாதே
முடியுமடா ...
புதிய வழிமுறைகள்
கண்டுபிடியேன் நீயே
கதிர் முற்றி தலைசாயலாம்
தன்னம்பிக்கையிருந்தால்..
சொட்டும் நீர் கூட
ஆகும் பாசனத்திற்கு..
ஏர் பிடித்த கைகள்
இன்று, நீரின்றியென
சும்மா இருக்கலாமோ?
போதுமென்ற மனமே
பொன் செய்யுமாம்.
வருந்தாதே வழியுண்டு...
நன்செய் நிலமெல்லாம்
இன்று புன்செய் நிலமானது..
புன்செய்யோ.
புதிய இல்லங்களாயின..
மாற்று அனைத்தையும்...
மாறும்....



ஏற்றமும் இறக்கமும்..
இருந்தால் தானே
சுவைக்கும் வாழ்வு...?

ஏர் முனைக்கு நேரிங்கே
எதுவுமேயில்ல
என்றும் நம்ம வாழ்விலே
பஞ்சமேயில்ல.....
ஆம்....நடத்து... நடக்கும்...

# இமைக்காத நொடிகள்



இமைக்காத நொடிகள்
இதயமதை அழுத்த
சுமக்காத உள்ளமதில்
சொல்லிய வார்த்தைகள்
உமக்காக வரைந்தேன்
உணர்வெழுதிய கவிதை
எமக்காக வருவாயோ
ஏக்கமுடன் நானே
மையெழுதிய விழிகள்
கரைந்தது கண்ணீரால்
மெய்யென சொல்லிய
காதலின்று காவலால்
பொய்யெனவே ஆகிடவே
புரியாது நான்விழிக்க
கையெனைப் பிடிக்கும்
நாள்தான் எப்போது?

# நிழலாய்த் தொடர்வேன்

நிழலாய் வருவேன்
நிஜமாய் நானே

உனையே தொடர்ந்து
உன்னுள் நுழைந்தே

விழிகள் நிறைந்தே
உறைந்த உன்னை

விதிதான் வந்தே
பிரித்திட
நினையினும்

வழியின்றி மொழியின்றி
தவித்திடினும்

நினைவினில்
நிறைவாய்
நனவிலும் நீயே

மறந்திடத்தான்
ஆகுமோ என்னால்
பிரியா நிழலாத்
தொடர்வேன் என்றும்.



# ஏன் வந்தாய்

என்னுள் வந்தவரே
ஏற்றமிகும் என்னவரே
வாசம் செய்வதாலோ
வாட்டி வதைக்கின்றீர்?

நேசம் கொண்டே
என் மனதில் தானே
என்னை விட்டுச்செல்லாது
எப்போதும் உடன் இருப்பீர்!

கொட்டிய அன்பினில்
விட்டில் பூச்சியென
விழுந்த காரணமோ
எட்டி நிற்காது
கிட்டே வரும்
மெத்தப்பரிவோ
சத்தமின்றி சொல்லுதே
சொந்தம் நீயென
பட்டமரமும் துளிர்த்ததே
பாசப்பாடல் இசைக்குதே
பட்டுப்பூச்சியாய்
சிறகடித்தே...



# சேற்று வயலோரமாய் சிந்திய புன்னகையில்

செவ்வந்தியே சிங்காரியே
சேற்று வயலோரமாய் நேற்றுநீ
சிந்தியப் புன்னகையில்
தோற்றுத்தான் போனேனடி
தோகை மயிலே ஏறுதடி எம்மனசு
ஏத்தமிறைச்ச நீர் வாய்க்காலைப்போல் ..

சித்திரை மாசக்  குளிர் நிலவாய்
நீ வீசிய வெள்ளொளியில்
நித்திரை கெட்டே
சுத்தி சுத்தி அலையுறேனே
பத்த வச்ச எம் மனச
பக்குவமாய் அணைப்பதெப்போ?

பாசம் வச்ச பைங்கிளியே
வேசக்காரன் நானல்ல
மோசம் போக வைப்பேனோ?
மேகமென வந்திடுவாய்
மோகம் தைத்த நெஞ்சினுள்
தாகம்தனைத் தீர்த்திடுவாய்

அய்யா அழகு ராசா
ஆச வச்ச
இந்த அன்பு ரோசா
போடுமே வண்ணக்கோலம்
உன் ஆச நெஞ்சினிலே
மாலை ஒண்ணு நீ போடு
மாமன் மனசிலே
வெளக்கேத்தும் விரைவாக
விளைஞ்சி நிக்கும் நலமாக..

# காவிரித்தாயே வாராயோ?

காவிரியே கண்ணீரில் நாங்கள்
காடுகரை மேடெல்லாம் ஓடிய வாய்க்கால்கள்
காய்ந்து தான்போயினவே
கண்ணீரே கதையென ஆயினவே...
பாடு பார்த்த உழவனின்று
மோடு பார்த்திரான்
வீட்டினிலே
உண்ண உணவுமில்லை
உடுக்க உடையுமில்லை
தொங்குகின்றான் தூக்குக்கயிற்றில்..
நீர் பிடித்த வயல்கள் எல்லாம்
ஏர் பிடிக்க வழியுமின்றி
வெடித்துதான் போயினவே
அய்யோ !!! அடிவயிறு எரிகின்றதே!!!
அண்டைச்சோதரர்கள் நாமே..
விட்டுக் கொடுங்கள்
அள்ளிக்கொடுக்க வேண்டா.
கிள்ளிக்கொடுங்கள்...
தழைக்குமா ?
தமிழகம்
கிடைக்குமா காவிரி?
வேலியே பயிரை மேய்ந்தால்
விடிவதுதான் எப்படி?



# சாட்டையிற் பம்பரமென

சுற்றும் பூமி சற்றும் நிற்பதில்லை.
சாட்டையிற் சுற்றும் பம்பரமென...
எத்தனை மாற்றங்கள்!!
எவ்வளவு ஏற்றங்கள்!!
உயரத்தில் ஏறுது உன்னதமாகவே
என்னென்னவோ கண்டுபிடிப்புகள்!!
எப்படி எப்படியோ?
சாட்டையைச்சுற்றியவன்
கையில் உலகம் பம்பரமென
ஓடி ஓடி நில்லாது போகும்
மானிட உலகு ஒழுங்கில்லாது
என்ன செய்யக்காத்திருக்கிறோம்?
ஏனடா நீ?
எழு!!!
புதிய உலகைப்படை!!
விண்மீன்கள் உன்வசமின்று..!!!
வானப்பந்து கூட
உன்னருகில்தாம்!!
எழுச்சியும் வீழ்ச்சியும்
உன் கையில் தாம்!!
போட்ட விதையின்று புல்லன்று பெருமரம்காண்
மனிதம் என்னும் மாபெரும் ஆற்றல் முயற்சி என்னும்
மூல மந்திரம்
இன்னல் வந்தால்
இடுப்பொடிக்காதோ
எழுவாய் சோதரா
உலகம் உன் கையில்!



# பனி விழும் இரவு

பனி விழும் இரவில்
நனைந்த நிலவென அவள்
ஒளிர்ந்த முகத்தில்
தெரிந்த அழகு...
கொள்ளை கொள்ளும்

வானிலவு வந்ததோ
தரையினில்
தேனிலவாய்
முகிழ்த்தே...
குளிர்ந்த முகத்தில்
வரைந்த ஒவியக்கீற்றுகள்
நிழலாய்த்தெரிந்தது அழகாய்..

யாரை எதிர்பார்த்து
இந்த வருகை?
பைங்கிளியின்
பாசம் வைத்த
பாவலன் யாரோ?

தயக்கம்
நிறை மனத்தினலாய்
மயக்கம் கொண்டே
மயங்குகின்றாளே
கலக்கம்  கொண்டே..

ஓ வானிலவே
செல்லாய் நீ
போய் உரைப்பாய்
அவனிடத்தே
வஞ்சியின் எண்ணமதை
பனி விழும் இரவினில்...
தனியளாய்த் ...
தாரகையின் தனிமையை.



# நீல வான ஓடையில்

நீல வான ஓடையிலே நீந்தும் வெண்ணிலா
எனை என்றும் சீண்டும் பெண்ணிலா
இன்றும் மட்டும் எந்தன் கண்ணிலா

ஏனோ வந்தே எனைவாட்டி வதைக்கிறாய்
கூட்டிப்போகிறாய் பின்னோ போட்டு உடைக்கிறாய்

வட்டக்கன்னம் காட்டி
கொஞ்சம் கிட்டே வருகிறாய்
தொட்டுப்பார்க்க ஆவல் கொண்டே
ஆசை கொண்டேனே உன்னில் பாசம் வைத்தேனே.

மின்னும் ஒளியில் நீயே எந்தன்
கண்ணைப்பறிக்கிறாய்
விண்ணில் இருக்கிறாய்
என்னில் எப்போ வருவாயோ
வாசம் கொள்வாயோ? நேசம் வைப்பாயோ
இல்லைத்தூக்கி எறிவாயோ?

அடடா என்ன நேர்ந்தது?!!! என்னிலிங்கே
காதலியும் வெண்ணிலாவும் ஒன்று சேர்ந்ததோ
வண்ண கனவாய் மின்னி மறைந்ததோ

tamilnenjam.com

# கவிஞர் தென்றல் கவி

## தமிழ்ச்சிட்டு



கவிதை எழுதுபவன் கவியன்று.
கவிதையே வாழ்க்கையாக உடையோன்,
வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன்,
அவனே கவியென்றான் சுப்ரமணிய பாரதி.

தென்றல் கவி தமிழ்ச்சிட்டும்
தனது வாழ்வின் உணர்வுகளை பொய்யின்றி
சிறப்பாகவேக் கவிவரிகளைத் தந்திருக்கிறார்.
காதலும் இங்கே இழையோடுகிறது.
காதலைப் பாடாத கவிஞர்கள் இல்லை.
அதற்கு அழகியல் வர்ணம் பூசியிருக்கிறார் கவிஞர்.
அழகாகவே கைவந்திருக்கிறது.
காதலை சொல்லும் விதம்தான் எவ்வளவு அழகு.

இது இவரது முதல் நூலென்று சொல்ல
முடியாத அளவுக்கு சொற்கள் சிலம்பமாடுகிறது.
கவித்திறமையைப் பாராட்டாமலிருக்க முடியாது.

இந்த வண்ணக் கவிக்களஞ்சியத்தை
தமிழ்நெஞ்சம் பதிப்பித்து மகிழ்வதுடன்,
இன்னும் நிறைய நூல்களைத் தமிழுலகிற்குத்
தந்து சிகரம் தொட வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்

**தமிழ்நெஞ்சம் அமின்**

ஆசிரியர் தமிழ்நெஞ்சம், பிரான்ஸ்